Vol.38 Issue No.16 2025 ஜூன் 11-13 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே'

நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்

## போராட்டத்திற்கு ரெடியாகும் அரசு ஊழியர்கள்!



NKN110625

# கூட்டணி ஷாக்!
# பிரதமர் கனவில் அமித்ஷா!
# கொதிப்பில் எடப்பாடி!

ராங்-கால்!

# கொதிப்பில் எடப்பாடி!



"ஹலோ தலைவரே, அமித்ஷாவின் வருகையும் அவரது பேச்சும், அவர்களின் கூட்டணியை பலவீனப்படுத்துவது போல் அமைந்துவிட்டது என்று கமலாலயத் தரப்பே சொல்கிறது."

"ஆமாம்பா, கூட்டணி ஆட்சி அமைப்பதில்லை என்பதில் எடப்பாடி உறுதியாக இருக்கிறார். ஆனால், அதற்கு எதிராக அமித்ஷா பிரகடனம் பண்ணிவிட்டுப் போயிருக்கிறாரே?"

"உண்மைதாங்க தலைவரே, மதுரை வந்த அமித்ஷா, அங்குள்ளவர்களை குளிரவைக்கும் விதமாக மீனாட்சிஅம்மன் கோயிலுக்கு விசிட்டடித்தார். பிறகு பா.ஜ.க.வின் உயர்மட்டக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு, கட்சியினருக்கு உற்சாகமூட்டும் வகையில் பேசினார். அதேபோல், மதுரை ஒத்தக்கடைப் பகுதியில் நடந்த பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் தி.மு.க.வைக் கடுமையாகத் தாக்கிப் பேசிய அமித்ஷா, வரும் சட்டமன்றத் தேர்தலில் எங்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெறும். தமிழகத்தில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமையும் என்று முழக்கமிட்டார். இதையறிந்து கூட்டணி ஆட்சியா? என்று ஏகத்துக்கும் டென்சன் ஆகியிருக்கிறாராம் எடப்பாடி. மேலும் பா.ஜ.க. கூட்டணியில், எடப்பாடியால் வெறுத்து ஒதுக்கப்படும் டி.டி.வி. தினகரனுக்கு, 5 சீட்டுகள் ஒதுக்குவதாக அமித்ஷா வாக்குறுதி கொடுத்திருக்கிறாராம். அதேபோல் ஓ.பி.எஸ்., சசிகலா ஆகியோரையும் பா.ஜ.க. கூட்டணியில் இணைத்துக்கொள்ளும் முயற்சிகளும் நடந்து வருகிறதாம். இவற்றையும் அறிந்த எடப்பாடி, கொதித்துப்போயிருக்கிறாராம். இந்தக் கூட்டணி ஒத்துவரும்னு தோணலை என்று, தன் சகாக்களிடம் அவர் புலம்பவும் ஆரம்பித்துவிட்டாராம்."



"அதேபோல் அமித்ஷாவை, தயாநிதிமாறனின் கேள்விகள் அப்செட் ஆக்கியதையும் பார்க்க முடிந்தது என்கிறார்களே?"

"ஆமாங்க தலைவரே, மறுசீரமைப்பு என்கிற பெயரில், தமிழகத்தின் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க மத்திய அரசு சதி செய்வதாக முதல்வர் ஸ்டாலின் தொடர்ச்சியாக குற்றம்சாட்டி வருகிறார். இதற்கு தெளிவான பதில் மத்திய அரசிடமிருந்து வராத நிலையில், தயாநிதி மாறனோ, அரசியலமைப்புச் சட்ட திருத்தம் 84ன்படி, 2026க்கு முன் மேற்கொள்ளப்படும் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில்தான் தொகுதி மறுவரையறையை மேற்கொண்டாக வேண்டும். ஆனால் ஒன்றிய அரசோ, 2027ல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், அதனடிப்படையில் தொகுதி மறு சீரமைப்பு செய்யப்படும் எனவும் அறிவித்திருப்பது, அதன் நோக்கத்தை அம்பலப்படுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டின் எம்.பி. தொகுதிகளின் எண்ணிக்கை குறையாது என்கிற ஏமாற்றுவார்த்தைகள் எங்களுக்கு வேண்டாம்.

www.nakkheeran.in



நாமக்கல்லை நடுங்க வைத்த மூதாட்டி கொலை -4 தனிப்படை அமைப்பு



டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையை திறந்து வைக்கவும்;
பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கவும்;
புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் சேலம் மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களை வருக! வருக!!
என வரவேற்று மகிழ்கிறேன்.
செள.அருண்பிரசன்னா BE.,
மாவட்ட அமைப்பாளர் - இளைஞர் அணி
சேலம் மத்திய மாவட்ட தி.மு.க இளைஞர் அணி



# போராட்டத்திற்கு ரெடியாகும் அரசு ஊழியர்கள்!

மக்களவையில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவ விகிதம் 7.18 சதவீதத்தில் எந்த மாற்றமும் இருக்காது என்ற உத்தரவாதத்தை அளிக்கத் தயாரா? பதில் சொல்லுங்கள் அமித்ஷா அவர்களே என்ற கேள்வியை அமித்ஷாவை நோக்கி எழுப்பினார். இதை பா.ஜ.க. நிர்வாகிகள், மதுரையில் அமித்ஷாவின் கவனத்துக் கொண்டுபோக, அவர் பதட்டமாகிவிட்டாராம்."

"அமைச்சர் ஒருவரின் பெயர், வில்லங்க விவகாரத்தில் அடிபடுகிறதே?"

"ஆமாங்க தலைவரே, சமீபத்தில் சிவகங்கை மாவட்ட மல்லாக்கோட்டையில் உள்ள மேகா ப்ளூ மெட்டல் எனும் குவாரியில் பாறை சரிந்து, ஆறு பேர் பலியானார்கள். இது குறித்து நமது நக்கீரனிலும் அதிர்ச்சி ரிப்போர்ட் வெளியாகியிருந்தது. இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், அந்த குவாரி லைசன்ஸ் காலாவதியானதும் அந்த குவாரி, அதன் உரிமையாளர் மேகவர்மனின் மனைவி பெயரில் இருப்பதும் தெரிய வந்தது. இந்த நிலையில், தலைமறைவாக இருக்கும் மேகவர்மன், ஜாமீன் வாங்கும் முயற்சியிலிருக்கிறார். இந்த நிலையில், குவாரி உரிமையாளர் மேகவர்மனைத் தொடர்புகொண்டு 'உன்மேல உள்ள வழக்குகளை நாங்க பார்த்துக்கறோம். உங்க எல்லாப் பிரச்சினையையும் நாங்க சால்வ் பண்றோம். அதுக்கு, உன்கிட்ட இருக்கும் ஐந்து குவாரிகளிலும் எங்க அமைச்சரும் பங்குதாரராக இருப்பார். நீங்க இதுக்கு ஒத்துக்கிட்டா, எல்லாத்தையும் சரி பண்ணிடறோம்' என்று, தமிழக அமைச்சர் ஒருவரின் ராமர் பெயர்கொண்ட உறவினர் டீலிங் பேசிவருகிறாராம். அசைவ ஓட்டல்களை நடத்தும் அவரின் அப்ரோச்சில் மிரண்டுபோய்விட்டாராம் குவாரி உரிமையாளர்."




"அமைச்சர் நேருவுக்கும் லால்குடி தி.மு.க. எம்.எல்.ஏ.வுக்கும் இடையிலான உரசல் அதிகரித்தபடியே இருக்கிறதே?"

"லால்குடி சட்டமன்றத் தொகுதியில் 4ஆவது முறையாக வெற்றி பெற்றவர் சௌந்தரபாண்டியன். இவருக்கும் மாவட்ட அமைச்சர் நேருவுக்கும் ஏழாம் பொருத்தம். இந்த நிலையில் அமைச்சர் தன் தொகுதிக்கு எந்த முக்கியத்துவமும் தருவதில்லை என்று தனது எக்ஸ் பக்கத்தில் பகிரங்கமாகவே எம்.எல்.ஏ. விமர்சித்திருக்கிறார். இந்த நிலையில், அமைச்சருடன் சமாதானமாகப் போக விரும்பிய அவர், அமைச்சர் வீட்டில் அமலாக்கத்துறை சோதனை நடத்தியபோது அங்கே சென்றார். அப்போது சந்தடி சாக்கில், தன் மகனுக்குத் திருமணம் வைத்திருப்பதாகவும், அதற்கு முதல்வர் ஸ்டாலினிடம் தேதி வாங்கித் தரும்படியும் நேருவிடம் கோரிக்கை வைத்தார். ஆனால் அவரிடம் முகம் கொடுத்துப் பேசாத நேரு, அன்னியூர் சிவா மூலம், 'திருமணத்திற்கு நான் வரமாட்டேன் என்று சொல்லிவிடுங்கள்' என்று தெரிவித்துவிட்டார். இதனால் அமைச்சருக்கு எம்.எல்.ஏ. அழைப்பு வைக்கவில்லை. அண்மையில் நடந்த அவர் வீட்டுத் திருமணத்திற்கு அமைச்சர் நேரு செல்லாமல் தவிர்த்துவிட்டார். இவர்களின் மோதல் போக்கு, கட்சியினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்திவருகிறது."

"அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தி.மு.க. அரசுக்கு எதிரான போராட்டத்தை நடத்தத் தயாராகி வருகிறார்களே?"

"தி.மு.க.வுக்கு இருக்கும் வாக்கு வங்கியில் கணிசமானவை, அரசு ஊழியர்களிடமும் ஆசிரியர்களிடமும்தான் உள்ளன. இவ்வளவு வாக்குபலம் கொண்ட இவர்கள், பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென கடந்த 15 ஆண்டுகால

NKN-10625



திருப்பூர் தெற்கு தொகுதி அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. குணசேகரன் உயிரிழப்பு



NKN110625
advt

வருமான வரித்துறை கூடுதல் ஆணையராக பணியாற்றிய அருண்ராஜ், த.வெ.க.வில் இணைந்ததையடுத்து கொள்கைபரப்பு பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார்

மாகப் போராடிவருகிறார்கள். முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில், இவர்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதாகச் சொல்லி, நம்பவைத்தனர். ஆனால், எதுவும் நடக்கவில்லை. இந்த நிலையில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அரசு ஊழியர்களின் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவோம் என ஸ்டாலின் உத்தரவாதம் கொடுத்திருந்தார். ஆனால், அவரது ஆட்சிக்காலம் 4 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையிலும், அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. இதனால் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பெரும்கோபம் கொண்டனர். இந்த நிலையில், இது குறித்து ஆராய கமிட்டி ஒன்றை அமைத்தார் ஸ்டாலின்."


''ஆமாம்பா. அது வெறும் கண் துடைப்புன்னு அரசு ஊழியர் சங்கங்கள் குற்றம்சாட்டுச்சே?"

''உண்மைதாங்க தலைவரே, அதனால், அரசை எதிர்த்து அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஸ்ட்ரைக் நடத்தத் திட்டமிட்டனர். உடனே, இதற்கு தடை விதிக்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அரசுத் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை நீதிமன்றம் கடந்த வாரம் தள்ளுபடி செய்துவிட்டது. இதனால், மாநிலம் தழுவிய தங்களின் போராட்டத்துக்கு அனுமதி கிடைத்திருப்பதை வைத்து, அரசுக்கு நெருக்கடி தரவேண்டும் என்று அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் சங்கத்தினர் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகிறார்கள். இதைத் தொடர்ந்து, அவர்கள் போராட்டத்துக்குத் தயாராகிவருகிறார்கள். அப்படி இவர்களின் போராட்டம் வெடிக்குமானால், வரும் தேர்தலில் 200 இடங்களை வெல்வோம் என்று சொல்லி வரும் முதல்வர் ஸ்டாலினின் கனவுக்கோட்டையில் பலமாக ஓட்டை விழும் என்கின்றனர் இவர்கள். இதற்கிடையே, பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முதல்வர் ஸ்டாலின் ஒப்புக் கொள்வதாகவும், ஆனால், அவரை ஆக்ரமித்திருக்கும் முக்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், இதற்கு முட்டுக்கட்டை போட்டுவருவதாகவும் கோட்டை வட்டாரத்தில் செய்திகள் சிறகடிக்கின்றன."

''டெல்லியிடம் பா.ம.க. ராமதாஸ் இணக்கமாகிவிட்டார் போலிருக்கே?"

"பா.ம.க.வில் நடக்கும் உள்கட்சிப் பிரச்சனைகளை தீர்க்க, டெல்லியின் விருப்பப்படி தைலாபுரத்தில் டாக்டர் ராமதாசை, பா.ஜ.க. பிரமுகரான ஆடிட்டர் குருமூர்த்தியும், சைதை துரைசாமியும் சந்தித்தனர். அப்போது, தேர்தல் நெருங்கும் நேரத்தில், நீங்கள் உங்கள் மகனுக்கு எதிராக மாறியதை உங்கள் எதிரிக் கட்சியான தி.மு.க. ரசித்துவருகிறது. இதற்கு நீங்கள் இடம் தரலாமா? என்று கேட்டிருக்கிறார் ஆடிட்டர். ராமதாஸோ, எனக்குத் தெரியாமல் நடத்திய விளையாட்டில் கிடைத்த பரிசுகளை எல்லாம் என்னிடம் ஒப்படைக்கச் சொல்லுங்கள் என்றாராம். இதுகுறித்து ஆடிட்டர், அன்புமணியிடம் விவாதிக்க, அவர் இறங்கிவரவில்லையாம். இந்த நிலையில், சென்னைக்கு வந்த ராமதாஸை, போயஸ் கார்டன் பகுதியில் உள்ள அவரது பேரன் முகுந்தன் வீட்டில் மீண்டும் ஆடிட்டர் சந்தித்திருக்கிறார். அப்போது, உங்கள் எதிர்பார்ப்புகளும் விருப்பங்களும் நிறைவேறும். பா.ம.க.வை உடையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பா.ஜ.க. கூட்டணியில் பா.ம.க. இடம்பெற வேண்டும் என்று தெரிவித்திருகிறார். இதில் சமாதானமான ராமதாஸ், நான் இப்போதும் பிரதமர் மோடியின் நண்பர்தான். அமித்ஷாவுக்கு என் வாழ்த்துகள் என்று தெரிவித்தாராம்."


ராமதாஸ்


ஆடிட்டர் குருமூர்த்தி

"தமிழகத்தின் மணல் குவாரி விவகாரம் முடிவுக்கு வந்திருக்கிறதே?"

"மணல் குவாரி உரிமம் தொடர்பாக சிக்கல்கள் நீடித்துவந்ததால், இத்தனை நாளாக திறக்கப்படாமல் இருந்த மணல் குவாரிகள், விரைவில் திறக்கப்படவிருக்கிறது என்கிறார்கள்.



ராமநாதபுரத்தில் கார், வேன் மோதி விபத்து -சிறுமி உள்பட 2 பேர் பலி


டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையை
திறந்து வைக்கவும்; பல்வேறு நலத்திட்ட
உதவிகள் வழங்கவும்; புதிய
திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும்
சேலம் மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
நல்லாட்சி நாயகர்
அவர்களை வருக! வருக!
என வரவேற்று மகிழ்கிறேன்.
நன்றியுடன்
ஆ.இராமச்சந்திரன்
மேயர், சேலம் மாநகராட்சி

கர்நாடகத்தில் தக் லைஃப் ஓடும் திரையரங்குகளுக்கு பாதுகாப்பு வழங்க முடியாது: உச்சநீதிமன்றம் திட்டவட்டம்

காரணம், உரிமம் தொடர்பான பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட்டுவிட்டதாம். ஏற்கனவே தமிழகத்தில் மணல் குவாரிகளில் கோலோச்சி வந்த எஸ்.ஆர். குருப்ஸுக்கும், மயிலாடுதுறை ராஜப்பாவுக்கும் இடையே உரிமம் தொடர்பான போட்டி நிலவிவந்தது. முதல்வர் தரப்போ, ராஜப்பாவுக்குத்தான் இந்தமுறை குவாரி உரிமத்தைக் கொடுக்க வேண்டும் என்று கூற, அமைச்சர் துரைமுருகனோ, எஸ்.ஆர். குருப்ஸுக்காக போராடிவந்தார். இந்த நிலையில், இப்போது ராஜப்பா வசம் குவாரிகளை நடத்துவதற்கான உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். இதைத் தொடர்ந்து, ராஜப்பா சமீபத்தில் தன்னுடைய சொந்த ஊரான மயிலாடுதுறையில் வெற்றி பூஜையை, தடபுடலாகப் போட்டிருக்கிறாராம்.”

“கோவை அ.தி.மு.க. பிரமுகர் ஒருவருக்கு நேர்ந்தது பற்றி போலீஸ் வட்டாரத்தில் கிசுகிசுக்கிறார்களே...”

“ஆமாங்க தலைவரே...

## மாணவிக்கு பாலியல் தொல்லை! காவலாளி போக்சோவில் கைது!


தாம்பரத்தில் சமூக நலத்துறை சார்பில் நடத்தப்பட்டுவரும் அரசு சேவை இல்லத்தில் தங்கி, அப்பகுதியிலுள்ள அரசு பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த காவலாளி மேத்யூ என்பவர் போக்ஸோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த விடுதியில் தங்கி படித்துவரும் விழுப்புரத்தை சேர்ந்த 13 வயது சிறுமி, கடந்த 8ஆம் தேதி ஞாயிறன்று காலையில் தனது அறையிலிருந்து வெளியே வந்தபோது, விடுதியின் காவலாளி மாத்யூ அச்சிறுமியின் முகத்தை துணியால் மூடி, தூக்கிச்சென்று பாலியல் தொல்லை கொடுக்க, அவனிடமிருந்து தப்பித்து ஓடும்போது தவறி விழுந்ததில் மாணவிக்கு கால் முறிந்தது. காவலாளி தப்பியோடிய நிலையில், அம்மாணவியை மீட்டு குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்து, பின்னர் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்து தீவிர சிகிச்சையளிக்கப்படுகிறது. இதுகுறித்து மாணவியிடம் விசாரணை செய்த போலீசார், காவலாளி மேத்யூ மீது போக்சோ சட்டத்தில் வழக்குப் பதிந்து கைது செய்தனர். **-கீரன்**



கோவையைச் சேர்ந்த அந்த அ.தி.மு.க. பிரமுகர், ஆற்காட்டைச் சேர்ந்த தங்கள் கட்சியின் பெண் பிரமுகருடன் கன்னியாகுமரியில் உள்ள ஒட்டலில் அறையெடுத்துத் தங்கினார். இவர்களுடன் இன்னொரு ஜோடியும் அங்கே சென்றிருக்கிறது. இந்த நிலையில், அந்த நள்ளிரவில் அந்த ஒட்டல் அறையில் இருந்து பெண்களின் அலறல் சத்தம் கேட்க, தகவல் போலீஸுக்குச் சென்றிருக்கிறது. உடனே போலீஸின் ரோந்து வாகனம் அங்கே விரைந்திருக்கிறது. போலீஸைப் பார்த்ததும், அந்த கோவை அ.தி.மு.க. பிரமுகர் அங்கிருந்து ஓட்டமெடுத்துவிட்டாராம். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போலீஸ் அதிகாரிகளை அதட்டி உருட்டி, மிரட்டி வந்த அந்த கோவை பிரமுகர், இப்போது போலீஸைக் கண்டு, வியர்த்து விதிர்விதிர்த்து எஸ்கேப் ஆனதை அறிந்து, போலீஸ்காரர்களே சிரிக்கிறார்கள்.”

**"நானும் ஒரு தகவலைப் பகிர்ந்துக்கறேன்... சிந்தாதிரிப்பேட்டை நவீன மீன் அங்காடியில் கடை வேண்டுபவர்களிடம், பகுதி தி.மு.க. செயலாளர் மதன்மோகன் பணம் வசூலித்ததாகக் கடந்த (ஜூன் 07-10) நக்கீரன் இதழில் ராங்கால் பகுதியில் வெளியான செய்தியை அவர் மறுத்துள்ளார். தனது அரசியல் வளர்ச்சியைப் பிடிக்காமல், காழ்ப்புணர்ச்சியில் எவரேனும் இப்படி தவறான தகவலைத் தந்திருக்கக்கூடுமென்றும், தி.மு.க. ஆட்சி மீது களங்கத்தை ஏற்படுத்தவே இப்படியான அவதூறுகளைப் பரப்புகிறார்கள் என்றும் தனது மறுப்பில் குறிப்பிட்டுள்ளார்."**

•



அமைச்சர் நேரு

திருநெல்வேலியில் கொள்ளை வழக்கில் 2 வாலிபர்கள் குண்டர் சட்டத்தில் கைது

## பாரம்பரியமிக்க சித்த மருத்துவ சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.
: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300 E-mail : sales@sivarajsiddha.com

7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட எங்கள் வைத்திய சாலையில் தவறான பழக்கவழக்கத்தால் ஏற்பட்ட ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, ஹார்மோன் குறைபாடு, உயிரணுக்கள் குறைவு, இல்லறத்தில் பிரச்சினை, குழந்தையின்மை, ஆண்களுக்கான குறைபாடுகள், கருவுற்றல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு சிறந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

**தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை**



Dr.சிவராஜ் சிவகுமார்

### சென்னை கிளை
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில், VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம், சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

### ஈரோடு கிளை
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில், கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர், வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

### ஒசூர் கிளை
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம் அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஒசூர்.
M : 81108 03500

### திருப்பத்தூர் கிளை
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500



Dr.சிவராஜ் சிபி

## ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

### திருச்சி
1ம், 9ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் அபிராமி
சென்ட்ரல் பஸ்நிலையம், பெரியார் சிலை அருகில்.

### திருப்பூர்
1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை
14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
SAP ரெஸிடென்ஸி
111, முனிசிபல் ஆபீஸ் ரோடு.

### தஞ்சை
2ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காசி இன்
1493, தெற்கலங்கம், பழைய பேருந்து நிலையம்.

### கும்பகோணம்
2ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் திருமால்
ஜான்செல்வராஜ் நகர், புதிய பஸ்நிலையம் அருகில்.

### நாகர்கோவில்
2ம் தேதி,
காலை 6 முதல் மாலை 5 வரை,
ஹோட்டல் கங்கா பேலஸ்
K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்.

### நெல்லை
3ம், 23ம் தேதியும்,
காலை 6 முதல் மாலை 5 வரை,
பரணி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

### விழுப்புரம்
3ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஆதித்யா
தேர் விநாயகர் கோவில் & புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர்.

### காஞ்சிபுரம்
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
வசந்த் வில்லா
T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை & பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்.

### மதுரை
4ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
காலேஜ் ஹவுஸ்
டவுன் ஹால் ரோடு.

### கள்ளக்குறிச்சி
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
AKT லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

### தேனி
7ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்
பழைய பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

### திண்டுக்கல்
8ம், 24ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஐஸ்வர்யா
ஸ்பென்ஸர் காம்பௌண்ட், பஸ் நிலையம் எதிரில்.

### திருவண்ணாமலை
9ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி.

### வேலூர்
11ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்
3, தென்னைமரம் தெரு.

### கடலூர்
11ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் CAR லாட்ஜ்
62, லாரன்ஸ் ரோடு.

### சிதம்பரம்
11ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஜெயராம்
35, 36, SP கோயில் தெரு.

### மாயவரம்
12ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
அல்-முஜம்மில் லாட்ஜ்
பழைய பஸ்நிலையம் அருகில்.

### நாகப்பட்டினம்
12ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
நியூ குமார் லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

### மன்னார்குடி
13ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காவேரி லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

### புதுக்கோட்டை
13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை
26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ராயல் பார்க்
புதிய பஸ்நிலையம் எதிரில்.

### கோவை
13ம், 26ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
OYO ROOMS (கோடா ஓட்டல்)
294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில்.

### கரூர்
14ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஆர்த்தி ஹோட்டல்
திண்ணப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில்.

### புதுவை
16ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி
பஸ் நிலையம் எதிரில்.

### தென்காசி
18ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்
2, பழைய பஸ் நிலையம் ரோடு.

### கிருஷ்ணகிரி
20ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்
239, பெங்களூர் ரோடு.

### ஆரணி
21ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

### ராம்நாடு
24ம் தேதி
காலை 6 முதல் மாலை 5வரை
ஹாஜா பேலஸ்
துரைராஜ் சத்திரம் வீதி.

### சிவகாசி
25ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
மணீஸ் லாட்ஜ்
பஸ் நிலையம் பின்புறம்.

### பொள்ளாச்சி
27ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
சக்தி ஹோட்டல்
144, கோவை ரோடு.

### மேட்டுப்பாளையம்
28ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் காவேரி
K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு.

சிவராஜ் சித்த மருந்துகளை www.sivarajsiddha.com ஆன்லைன் மூலம் மருந்து பெறலாம்.
G Pay Paytm 98427 22500









7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட நிறுவனம்.

Advt

விடியற்காலை 4 மணிக்கு எழுந்து, 5 மணிவரை படித்துவிட்டு, அதன்பின் வீட்டு வேலைகளை தன் அம்மாவுடன் சேர்ந்து செய்து விட்டு காலை உணவாக வீட்டில் இருப்பதை சாப்பிட்டுவிட்டு, 1 கி.மீ. தூரமுள்ள பள்ளிக்கு புத்தகப் பையை சுமந்துகொண்டு நடக்கத் துவங்கிய அந்த பெண்ணின் கால்கள் இப்போது உலகின் பிரபலமான கல்வி நிலையங்களில் ஒன்றான ஐ.ஐ.டி.யை எட்டிப்பிடித்துள்ளது, கல்வராயன் மலைவாழ் மக்களுக்கு பெருமையை தேடித் தந்துள்ளார் ராஜேஸ்வரி.

சேலம் மாவட்டம், கல்வராயன்மலையின் மேற்கு பகுதியிலுள்ள கிராமம் கருமந்துறை. இந்த மலைக்கிராமத்தைச் சேர்ந்த ஆண்டி -கவிதா தம்பதிக்கு ஜெகதீஸ்வரி, ராஜேஸ்வரி, பரமேஸ்வரி என 3 மகள்களும், கணேஷ் என்ற மகனும் உள்ளனர். பெரிய படிப்பறிவற்ற ஆண்டி, தனது பிள்ளைகளை படிக்க வைப்பதில் குறியாக இருந்தார். படிப்புதான் பிள்ளைகளைக் காப்பாற்றுமென்பதில் உறுதியாக இருந்தவர், சொற்ப வருமானத்தை வைத்து, ஜெகதீஸ்வரியையும், கணேஷையும் கல்லூரிப் படிப்பு முடிக்கவைத்தார். அடுத்த மகள் ராஜேஸ்வரி, கருமந்துறை அரசு உண்டு உறைவிடப்பள்ளியில் இந்தாண்டு 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வெழுதி 561 மதிப்பெண் பெற்றுள்ளார். அவரது தங்கை 11ஆம் வகுப்பு படிக்கிறார்.

ராஜேஸ்வரி, கருமந்துறையிலுள்ள ஒரு தனியார் நடுநிலைப்பள்ளியில் 8ஆம் வகுப்பு வரை படித்தவர், 9ஆம் வகுப்பிலிருந்து அரசு உண்டு உறைவிடப்பள்ளியில் படிக்கத் துவங்கினார். அப்போது அவரது தந்தைக்கு குடல் புற்றுநோய் கண்டறியப்பட்டது. ராஜேஸ்வரி 11ஆம் வகுப்பு சேர்ந்த மூன்று நாட்களில் அப்பா இறந்துவிட்டார். இந்நிலையில், தொடர்ந்து அப்பாவின் விருப்பப்படி நன்முறையில் படித்து, தனது கிராமத்துக்கே பெருமை தேடித்தந்திருக்கிறார் ராஜேஸ்வரி.

கருமந்துறை அரசு உண்டு உறைவிடப்

# கல்வராயன் மலை டூ ஐ.ஐ.டி!

# சாதித்த மாணவி!

NKN0625

ராஜேஸ்வரி




www.nakkheeran.in

**உலகில் அதிகமாக வீணாக்கப்படுவது**
**யாராலும் புரிந்துகொள்ளப்படாத அன்பு!**

பள்ளியின் தலைமையாசிரியர் விஜயன் நம்மிடம், “ராஜேஸ்வரி 11ஆம் வகுப்பில் நல்ல மதிப்பெண் எடுத்தார். இதனால் உயர்படிப்புக் கான தேர்வில் கலந்துகொள்ளவைக்க தினமும் காலை, மாலை இரண்டு மணி நேரம் ஆன்லைன் வகுப்புகள் பள்ளியிலேயே நடத்தப்பட்டது. எங்கள் பள்ளியிலிருந்து 95 பிள்ளைகள் உயர் கல்விக்கான சிறப்பு பயிற்சிகளை பெற்றார்கள். அதில் ராஜேஸ்வரி ஜே.இ.இ மெயின் எக்ஸாம் எழுதி வெற்றிபெற்றார். அதன்பின் நடந்த 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 521 மதிப்பெண்கள் பெற்றார். பொதுத்தேர்வு முடிந்ததும் பெருந்துறையில் அரசு பயிற்சி மையத்தில் உயர்கல்விகளுக்கான தேர்வுக்கான பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு படித்தவர், ஜே.இ.இ. அட்வான்ஸ் தேர்வில் வெற்றிபெற்று அகில இந்திய அளவில் 417வது ரேங்க் எடுத்து, சென்னை ஐ.ஐ.டி.யில் சேரவுள்ளார்” என்றார்.

சேலம் மாவட்ட பழங்குடி நலத்துறையின் அலுவலர் சுகந்தி, “அரசு பழங்குடியின நலத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகளில் நன்றாக படிக்கும் பிள்ளைகளை தேர்வு செய்து உயர்கல்விக்கான போட்டித் தேர்வுகளை எழுத சிறப்புப் பயிற்சி வகுப்புகள் பெருந்துறை, செங்கல்பட்டு, குமுளியில் நடத்தப்பட்டன. அதில் 300 மாணவ -மாணவிகள் கலந்து கொண்டனர். இவர்களுக்கான பயிற்சி செலவு, தங்குமிடம், போக்குவரத்து உட்பட அனைத்து செலவுகளையும் பழங்குடியின நலத்துறையே ஏற்றுக்கொண்டு செலுத்தியது” என்றார்.

பழங்குடியின நலத்துறையின் சார்பில் கடந்த மூன்று ஆண்டுகளாக ஆங்கிலத்தில் சரளமாக பேசும் பயிற்சி உட்பட அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்தாண்டுக்கு, ராஜேஸ்வரி உட்பட 150 மாணவ, மாணவி களுக்கு செங்கல்பட்டில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி மையத்திலிருந்த மாணவி ராஜேஸ்வரியிடம் பேசியபோது, “என் தந்தை நாங்கள் நன்றாக படிக்கவேண்டும் என ஆசைப்பட்டார். எங்கள் தந்தை இறந்ததும் நாங்கள் தவித்துப்போய்விட்டோம். நான் வேலைக்கு போய் சம்பாதிச்சி தர்றேன், நீங்க படிங்கன்னு சொல்லி அம்மா படிக்க வைக்கறாங்க. அம்மாவோட ஒருநாள் கூலி 250 ரூபா. எங்கண்ணன் ஒரு டெய்லர் கடையில வேலை செய்றார். அண் ணன் தினமும் 250 ரூபாய் சம்பாதிக்கும். இதை வச்சிதான் நாங்க வாழ்ந்துக்கிட்டிருக்கோம். நாங்க ஏதாவது அரசு வேலைக்கு போகணும்னு அப்பா ஆசைப்பட்டார். எங்கப்பா கனவை நான் நிறைவேற்றுவேன்'' என்றார் தன்னம்பிக் கையுடன்.


கவிதா


கணேஷ்


விஜயன்

அம்மா கவிதா நம்மிடம், ''என் மகள் சாதிச்சிருக்குன்னு சொல்லும்போது எனக்கு சந்தோஷமா இருக்குங்க. எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பிள்ளைங்கள எப்படியாவது படிக்க வச்சிடணும்னு எங்க வீட்டுக்காரர் சொல்லிக்கிட்டேயிருப்பார். அவர் ஆசைப்படி இரண்டு பிள்ளைங்க டிகிரி வாங் கிட்டாங்க. ஒரு பொண்ணு அடுத்து காலேஜ் போகுது, இன்னொரு பொண்ணும் நல்லா படிக் குது. என்னால முடிஞ்சது அவுங்கள படிக்க வைக்கறதுதான், அதை நான் எப்பாடுபட்டாவது செய்துடுவேன்” என்றார் உறுதியுடன்.

கணேஷ் நம்மிடம், “பரம்பரையா இந்த இடத்தல இருக்கறோம், தாத்தா வாழ்ந்த காலத்துல மலையில பட்டா தந்திருக்காங்க. தாத்தா அதை வாங்கல. அதனால அரசாங்கம் தரும் இலவச வீடுகள் எதுவும் எங்களுக்கு கிடைக்கல” என்றார்.

ராஜேஸ்வரியின் சாதனையைப் பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது எக்ஸ் பக்கத்தில் பாராட்டு தெரிவித்ததோடு, அவரின் உயர் கல்விக்கான செலவை அரசே ஏற்றுக்கொள்ளும் எனவும் அறிவித்துள்ளார்.

கல்வராயன் மலையிலிருந்து ஐ.ஐ.டி.க்குள் நுழைகிறார்... சாதனை மாணவி!

**-கிங்**

NKN110625

**எப்போதும் வலிமையுடன் இருக்கவேண்டுமென்றால்
தனியாகப் போராடக் கற்றுக்கொள்!**

நடேஷ்கன்னா, கல்லிடைக்குறிச்சி

**'மக்கள் அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்' என வியட்நாம் அரசு தெரிவித்திருப்பது குறித்து?**

வியட்நாம் மட்டுமல்ல... உலகின் பல நாடுகள் மக்கள் தொகை கட்டுப்பாட்டிலிருந்து மக்கள் தொகை அதிகரிப்பை நோக்கி பார்வையைத் திருப்பியிருக்கின்றன. உலகமெங்குமே பிறப்பு விகிதம் குறைந்திருப்பதும், வயோதிகர் எண்ணிக்கை அதிகரிப்பதும் அந்நாடுகளின் பயத்தை அதிகரித்துள்ளது. வயோதிகர்கள் அதிகரித்தால் உற்பத்தி சிறக்காது. பிறப்பு விகிதம் குறைந்து கொண்டே போனால் இளைஞர் எண்ணிக்கை அதிகரிக்காது. ஆனானப்பட்ட சீனாவே ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தை பெற ஊக்குவிக்கும்போது, வெறும் 10 கோடி மக்கள்தொகையுள்ள வியட்நாமுக்கு அந்தப் பயம் இருக்காதா என்ன?

கே.ஆர்.ஜி. ஸ்ரீராமன், பெங்களூரு

**தே.மு.தி.க.வை இந்தியா கூட்டணிக்கு வரச்சொல்லி அழைப்பு விடுக்கிறாரே செல்வபெருந்தகை?**

அழைப்பா, கூட்டணியை இறுதி செய்கிறது. அதற்கு வேறு விஷயங்கள் இருக்கின்றன. அவை டேலியாகும்போது கூட்டணியும் முடிவாகும்.



# மாவலி பதில்கள்

மு.முஹம்மது ரபீக் ரஷாதீ, விழுப்புரம்

**வர்த்தகத்தைப் பயன்படுத்தி போரை நிறுத்தினேன் என்று கடந்த 22 நாட்களில் 12 முறை டிரம்ப் கூறியிருக்கிறாரே...?**

ட்ரம்பை ஆட்சிக்குக் கொண்டுவர பெட்டி பெட்டியாய் டாலர் செலவழித்த எலான் மஸ்கையே அலைக்கழித்துக்கொண்டிருக்கிறார். இதில் மோடியின் கௌரவத்தைப் பற்றி ட்ரம்புக்கு என்ன அக்கறை? 'தவளை தன் வாயால் கெடும்' என்பது பழைய பழமொழி. ட்ரம்பையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

குடந்தை பரிபூரணன், மல்லபுரம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு தணிக்கைக் குழு இருக்கிறதா?**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு தணிக்கை வேண்டுமென மதுரை உயர்நீதிமன்றத்தில் ஒருவர் பொதுநல வழக்கொன்று தொடுத்தார். அப்போது, மத்திய அரசுத் தரப்பில், இந்த விவகாரம் பார்லிமெண்ட் குழுவின் பரிசீலனையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவா, கல்லிடைக்குறிச்சி

**ராஜஸ்தான் சட்டசபை ராசியில்லாத இடம் என கூறப்படுவது குறித்து?**

நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் தெரிவித்தார்களா... இல்லை, இஸ்ரோவில் சொன்னார்களா? புதிய சட்டசபை கட்டிமுடிக்கப்பட்டு திறந்ததிலிருந்து அதன் முழுக் கொள்ளளவான 200 எம்.எல்.ஏ.க்களுடன் இல்லையாம். உடனே ராசியில்லாத சட்டசபை என முடிவுகட்டிவிட்டார்கள். சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் யாராவது விடுப்பெடுப்பார்கள், யாராவது மரணமெய்துவார்கள். அதனால் அவையில் எல்லோரும் ஆஜராகியிருப்பது அபூர்வமாகவே இருக்கும். இதற்காக ராசி, வாஸ்து பார்த்து சட்டசபையை பெயர்த்தெடுத்துக்கொண்டு போய் வேறிடத்திலா வைக்கமுடியும்?

வண்ணை கணேசன், கொளத்தூர்

**'இந்திய வரலாற்றில் மோடியின் 11 ஆண்டுகால ஆட்சி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்' என்று அமித்ஷா பேசியிருக்கிறாரே?**

எதிர்க்கட்சிகளிடம் கேட்டால், பணமதிப்பிழப்புக்காக வரிசையில் நிற்கவைக்கப்பட்டது, கொரோனா கால உயிரிழப்புகள்- இடப்பெயர்வுகள், மணிப்பூர் அவலம், குடியுரிமைத் திருத்தப் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டது, விவசாயிகளின் ஆண்டுக்கணக்கிலான போராட்டம், ஜி.எஸ்.டி. சுரண்டல், துறைமுகம், விமான நிலையங்களை அதானிக்கு தாரை வார்த்தது என மோடியின் சாதனையை நிறைய அடுக்குவார்கள். ஆனால் அவையெல்லாம் கண்ணீராலும் ரத்தத்தாலும் வரலாற்றில் பொறிக்கவேண்டிய சாதனைகள்.

கே.எம்.ஸ்வீட்முருகன், கரடிகொல்லப்பட்டி

**இழந்த புகழை மீட்பது- சினிமா, அரசியல் எதில் கடினமானது?**

தன் தன்னம்பிக்கையை இழக்காமல், உழைப்பையும் துணை வைத்துக்கொள்பவனுக்கு எந்தக் களமாக இருந்தாலும் இழந்த புகழை மீட்பது அத்தனை கடினமான ஒன்றல்ல.

ஜெ.மணிகண்டன், பேரணாம்பட்டு

**10 கிலோமீட்டருக்கு ஒரு அணை கட்டுவேன் என்று அன்புமணி பேசியுள்ளாரே?**

அவர் தடுப்பணை கட்டுவேன் என்றுதான் தெரிவித்துள்ளார். அணைகள் என்பது மிகவும் செலவு பிடிக்கும் விஷயம். அதனை 10 கிலோமீட்டருக்கு ஒன்று என்ற கணக்கில் கட்ட முடியாது. நாளை இவரிருக்கும் கூட்டணி ஜெயித்து ஆட்சிக்கு வரும்போது, இப்படிப் பேசியதை கூட்டணி அரசிடம் நினைவுபடுத்துகிறாரா எனப் பார்ப்போம்.

கே. பார்த்திபன், ஒசூர்

**உலகின் அழகான நடிகை யார்?**

இந்த விஷயத்தில் க்ரோக் ஏ.ஐ. சில பகுப்பாய்வின் அடிப்படையில் ஜோடி காமர், பிரியங்கா சோப்ரா, மார்காட் ரோப்பி, தீபிகா படுகோனே, ஜென்டாயா என ஐந்து பேரை அழகிகளெனச் சொல்கிறது. தேடியது இந்தியாவிலிருந்து என்பதால், க்ரோக் பட்டியலில் இரு இந்திய அழகிகளை சேர்த்துக்கொண்டதா... அல்லது உண்மையிலே அழகிகள் என்பதால் சேர்த்துக் கொண்டதா என்பது மாவலியின் சந்தேகம்!

NKM110625

சினிமா கொட்டகை 96

# ராம் நகர் படப்பிடிப்பில் நடந்தது என்ன?

தெலுங்கு மொழியில் நான் இயக்கிய இரண்டாவது படம் 'கக்ஷா'... தமிழில் வஞ்சம் தீர்ப்பது என்று அர்த்தம். அந்த நாட்களில் இது மிகப்பெரிய பட்ஜெட் படம். ஷோபன்பாபு, மோகன்பாபு, முரளிமோகன், சத்தியநாராயணா, அல்லு ராமலிங்கய்யா, ஜமுனா, ஸ்ரீதேவி, ஜெய சித்ரா, ஏ.சகுந்தலா என ஏகப்பட்ட நடிக-நடிகையர் நடித்தனர். பாடல்கள், சண்டைக் காட்சிகள் எல்லாமே பெரும் செலவில் எடுக்கப்பட்டது. கேரளா, ஊட்டி, மைசூர் என பல இடங்களில் படப்பிடிப்பு நடத்தப்பட்டது. உச்சகட்ட காட்சி இந்தி 'ஷோலே' படம் எடுத்த ராம் நகரிலே எடுத்தேன். இரு மலைகளுக்கு இடையே நூறடி நீளத்துக்கு மரப் பாலம் அமைக்கப்பட்டது. அதில் ஐம்பது குதிரைகளில் வில்லன் கூட்டம் வருவது காட்சி. அதை நாயகனும், நண்பர்களும் தடுத்து நிறுத்தப் போராடுவார்கள். அப்போது வெடிகுண்டுகளை மறைத்து வைத்து தகர்ப்பது திட்டம். அதில் ஒரு குண்டு வெடிக்காமல் உருண்டு போகும். அதை வில்லன் பார்த்துவிட்டால் எல்லாமே கெட்டுவிடும். இதை மறைப்பதற்காக பாவாடை அணிந்த ஒரு நாயகி நடந்துபோய் அதை தடுத்து பாவாடையால் மறைத்து நிற்பாள். இதை ஒத்திகை பார்க்கும்போது... நாயகி மறைத்து நின்றதும் ஒரு நடிகர் வேடிக்கையாக ஒரு கமெண்ட் அடித்தார். அது அந்த நாயகி காதில் விழுந்தது. உடனே எரிமலையாக வெடித்தார். நாயகனும் விடவில்லை... இருவரும் கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தினர். ராமாநாயுடு ஸார் தலையிட்டும் சண்டையை நிறுத்த முடியவில்லை. நாயகன் மன்னிப்பு கேட்டாக வேண்டும் என அடம்பிடித்தார் நாயகி.

நாயகன், 'மன்னிப்பா? நானா? இவகிட்டேயே? முடியவே முடியாது' எனச் சொல்லிவிட்டார். உடனே நாயகி காரில் ஏறி எங்கோ போனார். திரும்பி வரவேயில்லை. விசாரித்ததில், அவர் ஒரு கன்னட தயாரிப்பாளரும், நடிகருமானவர் வீட்டிலிருப்பதாக சேதி. தயாரிப்பாளரோடு நானும் அங்கு போனேன். அந்த நடிகர், பல சங்கங்களிலும் பொறுப்பிலிருப்பவர். அவர் நடிகை பக்கம் பேசினாலும், ஒரு விஷயத்தை தெளிவாகச் சொன்னார். 'இங்கே ஷூட்டிங் முடிக்காமல் போனால் ஏகப்பட்ட நஷ்டம் ஏற்படும். பாலம் போட்டு, குதிரைகள் வரவழைச்சு, பெரும் செலவு. எனவே நான் நாயகியை அனுப்பி வைக்கிறேன். நீங்கள் மீண்டும் இவரை அவமதிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். சென்னை போனதும் நடிகர் சங்கத்தில் பேசி நல்ல முடிவை எடுங்கள்' என்றார். படப்பிடிப்பு மீண்டும் தொடங்கி மூன்று நாட்கள் நடத்தி... முடித்துக்கொண்டோம். சென்னை வந்து மறுநாள் நாயகி தனக்கு வேண்டிய ஹீரோவிடம் விஷயத்தைச் சொல்லி, தன்னை கிண்டலடித்த தெலுங்கு நாயகனை அவமதிக்கத் திட்டமிட்டார். அதற்குள் நான் எவரிடம் சொன்னால் இந்தப் பிரச்சினை தீருமோ அவரிடம் சொல்லி... அந்த நாயகன், நாயகியிடம் பேசவைத்து விஷயத்தை முடித்து வைத்தேன்.

**எனக்குப் பிடித்த காட்சி...**

பல படங்களை நான் எழுதி, இயக்கி, தயாரித்திருந்தாலும் சில காட்சிகள் என் மனதில் நிலைத்து நின்றுவிடும். ஒரு ஸ்கூல் வாத்தியாருக்கு மூன்று பெண்கள். ஜெயசுதா, சித்தாரா, மாலாஸ்ரீ. இதில் சித்தாரா காது கேட்காத ஊமை. இவளைத் திருமணம் செய்தவன் ஒரு அரசியல்வாதி அக்காவின் தம்பி. அந்த வாத்தியாரின் ஆதரவு, தன் தேர்தல் வெற்றிக்குத் தேவை என்பதால் தன் தம்பியை அந்த வாய் பேசாத ஊமைப் பெண்ணுக்கு கட்டிவைக்கிறாள் அக்கா. தம்பிக்கு இரண்டாவது பெண்ணை மனைவியாக்கினாலும்,



டைரக்டர்-ரைட்டர்
வி.சி. குகநாதன்

NKN110625



'தெய்வத்தாய்' எம்.ஜி.ஆர். -சரோஜாதேவி

கல்லூரியில் படிக்கும் பேரழகி மாலாஸ்ரீயை எப்படியாவது இரண்டாவது மனைவியாக்குவதே லட்சியம். அவளோ தன் அக்காவின் வாழ்க்கை கெட்டுப் போய்விடக்கூடாது என்பதற்காக அக்கா புருஷனின் கொடுமைகளை தாங்கிக்கொள்கிறாள். ஒருநாள் மாலாஸ்ரீ வீட்டில் தனியாக இருக்கிறாள். அந்த சமயம் அவளை கெடுத்துவிட்டால், தனக்கு கட்டி வைத்துவிடுவார்கள் என்ற நோக்கத்தில்... அவளைக் கெடுக்க முயல்கிறான். அவன் மனைவி சித்தாரா தன் கணவனிடமிருந்து தங்கையைக் காப்பாற்ற போராடுகிறாள். அவன், சித்தாராவை பக்கத்து அறைக்குள் தள்ளி வெளியே பூட்டிவிடுகிறான். வீட்டுக்குள் நுழைந்த தந்தை, தன் அறைக்குள் போக... இந்தச் சத்தம் கேட்டு உள்ளே வருகிறார். எதிர்அறை கதவு பாதி மூடிய நிலை. உள்ளே மயங்கிய நிலையில் கிடந்த மாலாஸ்ரீயை அவன் கெடுக்க முயல... அவள் அப்பா அவனை இழுத்து மகளை காப்பாற்ற முயற்சி செய்கிறார். அவன் மிருகமாக மாறி மாமனாரை... தன் மாஸ்டரை தாக்கி... ரத்தம் வழிய, வழிய அடிக்கிறான். அந்த சமயம் மாலாஸ்ரீக்கு சுயநினைவு வர... அப்பா தாக்கப் படுவதை பார்த்து, கையில் கிடைத்ததை எடுத்து அக்கா புருஷனை தாக்குகிறாள். ''அவர் உன் மாமனார்டா... உனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த வாத்தியாரு.. ஆனா நீ அப்பாவையே அடிக்கிறே?ன்னு அடிபட்ட புலிபோல பாய்ந்து, பாய்ந்து அடிப்பாள். இந்தக் காட்சியில் தியேட்டரில் மக்கள் ஆரவாரத்தைப் பார்க்கணுமே!

**தெ**ன்காசி குடும்பம்...

திரையுலகில் அப்போதைக்கப்போது அதிசயங்கள் நடப்பதுண்டு. அப்படி ஒரு அதிசயக் குடும்பம்தான் இந்த தென்காசி குடும்பம். குற்றாலிங்கம், சங்கரன், ஆறுமுகம், வசதியான குடும்பம் தான். கலை ஆர்வமுண்டு... முருகன் ஆயில் மில்ஸ் முதலாளிகள், நிறைய நண்பர்கள். குறிப்பாக எம்.ஜி.ஆர். மீது மாறா பற்றுடையவர்கள். தென்காசி, குற்றாலம் பகுதிக்கு எம்.ஜி.ஆர். போனால், இவர்கள் வீட்டிலிருந்துதான் சாப்பாடு போகும். தி.மு.க. நடத்திய தென்காசி மாநாட்டுக்கு பெரும்

**உயர்ந்தாலும் ஆணவம் கொள்ளாதே!**
**தாழ்ந்தாலும் பொறாமை கொள்ளாதே!**



'கக்ஷா' -சோபன்பாபு -ஸ்ரீதேவி

உதவியாக இருந்தது இந்த முதலியார் குடும்பம். அண்ணா, கலைஞர், நாவலர், அன்பழகன் என எல்லோரும் இந்த குடும்பத்தோடு நல்லுறவு பேணி வந்தார்கள். சில எம்.ஜி.ஆர். படங்களை திருநெல்வேலி, கன்னியாகுமரி ஏரியாக்களுக்கு சில நண்பர்களோடு சேர்ந்து வாங்கி விநியோகஸ்தர்கள் ஆகவும் விளங்கியவர்கள். இதில் கடைசித் தம்பியான ஆறுமுகம் படம் எடுக்க ஆசைப்பட்டார். மற்ற இரு சகோதரர்களும் மறுக்கவில்லை. ஆறுமுகம் சீட்டாடுவார், அதில் நிறைய நண்பர்கள். மூத்தவருக்கு ஆர்.எம்.வீரப்பனோடு பழக்கம் உண்டு. இவர்களோடு பழகியவர்கள்... பிரிந்துபோய் நான் பார்த்ததில்லை. பிற்காலத்தில் பெரிய, பெரிய பதவிகளுக்கு வந்த பலபேர் இவர்களது நண்பர்களாய் இருந்ததை நான் பார்த்திருக்கிறேன். எல்லாம் இணைந்து எம்.ஜி.ஆரை இவர்களுக்கு படம் பண்ணும் வாய்ப்பை பெற்றுத் தந்தது. மூன்று சகோதரர்களும் சென்னை வந்து அலுவலகம் ஆரம்பித்தனர்.

"உங்களுக்கு இந்த தயாரிப்பு தொழிலில் அனுபவம் இல்லாததுனாலே ஆர்.எம்.வீரப்பனை உங்கள் ஒர்க்கிங் பார்ட்னராக வைத்துக்கொள்ளுங்கள்" என எம்.ஜி.ஆர். சொல்ல, சத்யா மூவிஸ் உருவானது. 'தெய்வத்தாய்' முதல் படம். இதில் கே.பாலசந்தர் என்ற நாடக ஆசிரியர், எம்.ஜி.ஆரால் திரைப்பட வசனகர்த்தாவாக அறிமுகம் செய்யப்பட்டார். எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மேனேஜராக இருந்த ஆர்.எம்.வீ. தயாரிப்பாளராக உயர்வுபெற்றார். படம் நூறு நாட்கள் ஓடி சாதனை படைக்கிறது. என்ன லீலாவினோதம் நடந்ததோ தெரியாது. சத்யா மூவிஸ் 'பேனர்' வீரப்பன் கைக்கும், லாபப் பணப் பங்கு தென்காசி சகோதரர்களுக்கும் போகிறது. அத்தோடு அவர்கள் ஊர் திரும்பினார்கள்.

சிலகாலம் கழித்தும் அவர்களை மீண்டும் சந்தித்த எம்.ஜி.ஆர். சென்னைக்கு வரவழைத்து ஒரு கம்பெனியை ஆரம்பித்து புதிய படம் தயாரிக்க வைக்கிறார். அதில் என்னை கதாசிரியராகவும், எஸ்.எஸ்.தென்னரசை வசனகர்த்தாவாகவும் அறிமுகம் செய்தார். இதில் மூத்த சகோதரர் குற்றாலிங்கமும், ஆர்.எம்.வீ.யும் கிடையாது. சங்கரன், ஆறுமுகம் சகோதரர்களுக்கு என்னை மிகவும் பிடித்துவிட்டது. தங்களோடு என்னை அலுவலகத்தில் தங்கவைத்து, பல பொறுப்புகளை என்னிடம் ஒப்படைத்தார்கள். முதல் படம் 'புதிய பூமி'. இரண்டாவது 'எங்க மாமா'. தொடர்ந்து 'அனாதை ஆனந்தன்', அடுத்து 'ஞான ஒளி'. பின்னர் 'கண்ணே பாப்பா'. தொடர்ந்து 'மன்னவன் வந்தானடி', மீண்டும் எம்.ஜி.ஆர். படம். அதற்குள் தேர்தல்... அந்தப் படம் பாக்யராஜ் நடிக்க 'அவசர போலீஸ்' என்ற பெயரில் முடித்தார். அதன்பின் சகோதரர்கள் படம் எடுக்கவில்லை.

ஆனால் 'ஜேயார் மூவிஸ்' என்ற அந்த அலுவலகம் எப்போதும் ஜேஜேன்னு கலகலப்பா இருக்கும். பல பிரபலங்கள் வருவதும் போவதுமாக இருப்பார்கள். எஸ்.எஸ்.தென்னரசு மூலமாக அந்த அலுவலகத்தில் பல பிரபலங்கள் பழக்கமானார்கள். அந்த அலுவலகத்தில் என்னை ஒரு இளைய சகோதரன் போலவே சங்கரன், ஆறுமுகம் இருவருமே நடத்தினார்கள். அவர்களின் உறவினர்கள் அனைவரும் எனக்கும் நெருக்கமானார்கள். தென்காசி, குற்றாலத்துக்கு என்னை பலமுறை அழைத்துப் போயிருக்கிறார்கள். பெரியவர் பையன் அண்ணாத்துரை, சங்கரன் ஸார் பையன் முருகன், ஆறுமுகம் ஸார் மகன் அழகு எல்லோருமே தங்கள் குடும்பத்தில் ஒருவன் போலவே நடத்துவார்கள். சாப்பாடு தடபுடலாக இருக்கும். ஆறுமுகத்தின் மாமனார் திருச்செந்தூர் கோவில் அறங்காவலராக இருந்தபோது என்னையும் அழைத்துப் போய் பல அபிஷேகங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைத் தந்தார். அவர் அம்பாசமுத்திரத்துக்காரர். அம்பாசமுத்திரத்தில் இவர்களுக்கு நிறைய உறவினர்கள் உண்டு. மணி முதலியார் பெரிய பேக்டரி நடத்தினார். அவரது சகோதரர்கள் டிரான்ஸ்போர்ட் கம்பெனி நடத்தினார்கள். அவர்கள் அனைவரும் என்னிடம் பாசமாகப் பழகுவார்கள். இந்த நல்ல மனிதர்களோடு பழகிய நினைவுகளெல்லாம் தற்போது நினைத்துப் பார்க்க இதயத்துக்கு இதமாக இருக்கிறது. பலமொழிப் படங்கள், பல மாநிலங்கள் ஷூட்டிங் என அலைந்த எனக்கு இதையெல்லாம் நினைத்துப் பார்க்க நேரமில்லாமல் போனது. இன்று அந்த நல்ல உள்ளங்களை எண்ணி மகிழ்கிறேன்.

**(திரை விரியும்...)**

படம் உதவி: ஞானம்

www.nakkheeran.in

# உண்மையின் குரல் உங்கள் கைகளில்!

**அனைத்துத் துறை தகவல்களையும் அதன்
உண்மைத்தன்மை மாறாமல் உடனுக்குடன் வழங்கும்
நக்கீரன் இணையம் - Youtube சேனல்கள்!**



நக்கீரன்
nakkheeran.in

NAKKHEERAN 360

நக்கீரன் நலம்

நக்கீரன் களம்

நக்கீரன் TV

NAKKHEERAN STUDIO

நக்கீரன் குழும வெளியீடுகளை
ஆன்லைனில் ஆர்டர் செய்ய
QR Code Scan செய்யுங்கள்..!

**தொடர்புக்கு**
**044-26881800**
**044-26881700**

www.nakkheeran.in

Advt



ராதிகா ஆப்தே

# சினி டாக்கீஸ்

## நிவேதா ரீ-என்ட்ரி!

தெலுங்கு இயக்குநர் பூரிஜெகன்நாத் இயக்கத்தில் விஜய்சேதுபதி படம் நடிக்க ஒப்பந்தமானார். இதன் படப்பிடிப்பு இம்மாதம் தொடங்கவுள்ளது. படத்திற்கான மற்ற நடிகர், நடிகைகள் தேர்வு நடைபெற்று வருகிறது. அதன்படி பிரபல நடிகை தபு கமிட்டாகியுள்ளார். கதாநாயகியாக இவர் நடிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. இவரைத் தவிர்த்து பாலிவுட் நடிகை ராதிகா ஆப்தே முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அவருக்கு பதிலாக மலையாள நடிகை நிவேதா தாமஸிடமும் கடந்த பல வாரங்களுக்கு முன்பு பேச்சு வார்த்தை நடத்தியது. படத்தில் நடிக்க ஒப்புக்கொண்ட நிவேதா தாமஸ் படப்பிடிப்பிற்கான கால்ஷீட்டையும் ஒதுக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இவர் ரஜினி நடித்த 'தர்பார்' படத்திற்குப் பிறகு ஐந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் தமிழ் படத்தில் நடிக்கவுள்ளார்.

## சீனியர் சிக்கல்!

ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட 'தக் லைஃப்' படம் மோசமான விமர்சனங் களை சந்தித்து வருகிறது. அதோடு சமூக வலைதளங் களில் சில ரசிகர்களால் ட்ரோல் களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன் கமல் நடிப்பில் வெளியான 'இந்தியன் 2' படமும் இதேபோல் விமர்சனத்தை சந்தித்து பல கிண்டல்களுக்கும் கேலி

களுக்கும் உள்ளானது. முயற்சி செய்தோம், அது சரியாக எடுபடவில்லை என கடந்து போய்விட்டாராம். ஆனால் அடுத்து அவர் நடிக்கும் படம் நிச்சயம் ரசிகர்களைக் கவரும் என அடித்துக் கூறுகிறார். அதற்குக் காரணம் படத்தை இயக்குபவர்கள் இளம் இயக்குநர்களான ஸ்டண்ட் மாஸ்டர்கள் அன்பறிவ் என்கிறார். மேலும் கடைசியாக தனக்கு வெற்றி கொடுத்தது லோகேஷ் கனகராஜ்தான். அவரைப் போன்ற இளம் இயக்குநர்கள், இன்றைய ரசிகர்களின் பல்சை சரியாக ஆராய்ந்து வைத்திருக்கின்றனர். எனவே இனி சீனியர் இயக்குநர்களிடம் கைகோர்க்க வேண்டாம் என எண்ணுகிறாராம் கமல்.

## அதிரடி ரவி!

ரவிமோகன் -ஆர்த்தியை பிரிவதாக அறிவித்ததிலிருந்து பல அதிரடி முடிவுகளை எடுத்தார். ஜெயம் ரவியை ரவிமோகன் என பெயர் மாற்றியது, தயாரிப்பு நிறுவனம் தொடங்கியது, ரசிகர் மன்றத்தை அறக்கட்டளையாக உருமாற்றியது உள்ளிட்டவைகள் அதில் அடங்கும். இதில் ரவிமோகன் ஸ்டூடியோஸ் என்ற தனது தயாரிப்பு நிறுவனத்தில் திறமையாளர்களுக்கும், நல்ல கதைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என ரவிமோகன் அதற்கான இயக்குநர்கள் மற்றும் கதை ஆசிரியர்களை தேடிவந்தார். தான் இயக்குநராக அறிமுகமாகும் படத்தை தனது பேனரிலே எடுக்கவும் முடிவெடுத்துள்ளார் ரவிமோகன். இதில் ஏற்கனவே அவர் சொன்னது போல் யோகிபாபு லீட் ரோலில் நடிக்கிறார். காமெடி கலாட்டா ஜானரில் படம் உருவாகிறது. ஆரம்பகட்ட வேலைகள் நடந்துவந்த நிலையில் அடுத்த மாதம் படப்பிடிப்பை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. குறுகியகால தயாரிப்பில் குறைவான பட்ஜெட்டிலே படத்தை முடிக்க ரவிமோகன் பிளான் செய்துள்ளார்.


ஆண்ட்ரியா

## ஆண்ட்ரியா அச்சம்!

ஆண்ட்ரியா நடிப்பில் இந்தாண்டு படம் எதுவும் வெளியாகவில்லை. ஆனாலும் கைவசம் நான்கு படங்களை வைத்திருக்கிறார். இதில் 'பிசாசு 2', 'நோ என்ட்ரி' ரிலீஸுக்கு தயாராகியும் சில காரணங்களால் வெளியாகாமல் இருக்கிறது. இந்த லிஸ்ட்டில் தற்போது அவர் பெரிதும் நம்பியுள்ள 'மனுசி' படமும் இடம் பெற்றுவிடுமோ என அச்சப்படுகிறார். வெற்றிமாறன் தயாரிப்பில் 'அறம்' பட இயக்குநர் கோபிநயினார் இயக்கத்தில் 'மனுசி' படம் உருவாகியுள்ளது. இது 'விசாரணை' என்ற பெயரில் காவல்துறையின் ஒடுக்குமுறைகளைப் பற்றி பேசியிருக்கிறது. இந்த படம் தனக்கு இதுவரை பெற்றுத்தராத ஒரு இமேஜை கொடுக்கும் என ஆண்ட்ரியா நம்பினார். ஆனால் படம் சென்சார் போர்டு அதிகாரிகள் சான்றிதழ் தர மறுத்ததால் சிக்கலில் சிக்கியுள்ளது. இருப்பினும் படத்தை வெளியிட வெற்றிமாறன் நீதிமன்றத்தை நாடியுள்ளார். அது சுமுகமான முடிவை நோக்கி நகர்வதாக சொல்லப்படும் நிலையில், ஆண்ட்ரியா தற்போது நம்பிக்கையோடு இருக்கிறார்.

**-கவிதாசன் ஜெ.**



**'எக்ஸ் தள உரிமையாளரும் டெஸ்லா நிறுவனத்தின் தலைவருமான எலான் மஸ்க் ஒரு புதிய நட்சத்திரம். மிகவும் அற்புதமான மனிதர். மிகப்பெரிய மேதை. இவரைப் போன்ற மேதைகளைப் பாதுகாப்பது எங்கள் அரசின் கடமை' என்றெல்லாம் எலான் மஸ்க்கை புகழ்ந்தவர் வேறு யாருமல்ல, அமெரிக்க அதிபரான டொனால்ட் ட்ரம்ப்தான். இப்படியிருந்த இவர்களின் நட்பில்தான் தற்போது மிகப்பெரிய விரிசல் விழுந்துள்ளது.**

கடந்த ஆண்டு நடைபெற்ற அமெரிக்க அதிபருக்கான தேர்தலில், ட்ரம்புக்கான தேர்தல் செலவுகளை எலான் மஸ்க் பார்த்துக்கொண்டார். தொழில்நுட்ப ரீதியாகவும் ட்ரம்பின் தேர்தல் பிரச்சாரத்துக்கு மஸ்க் மிகவும் உதவிகரமாக இருந்தார். அதனால்தான் வெற்றி பெற்றதும் எலான் மஸ்க்கை அவ்வாறு பாராட்டியிருந்தார் ட்ரம்ப். மேலும், அரசின் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்காக 'செயல்திறன் மேம்பாட்டு துறை (D.O.G.E.); என்ற ஒரு துறையை உருவாக்கி, அதன் தலைவராக எலான் மஸ்க்கை நியமித்தார் ட்ரம்ப். எலான் மஸ்க்கை தனது வலது கை போலவே எப்போதும் உடன் வைத்துக்கொள்ள முடிவெடுத்த ட்ரம்ப், உக்ரைன் அதிபரோடான விவாதம், சுந்தர் பிச்சையோடான விவாதத்திலும் எலான் மஸ்க்கையும் உடன் வைத்துக்கொண்டார். இரட்டை சகோதரர்கள் போலவே செயல்பட்டுவந்த இவர்களிடையே, அவரவர் அதிகார வரம்பு குறித்த ஈகோ பெரும் பிரச்சனையாக உருவெடுக்கத் தொடங்கியது.

இவர்கள் இருவருக்கிடையேயான முதல் முரண்பாடாக, அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன், சீனாவுடன் அமெரிக்கா போர் தொடுத்தால் சீனா எப்படியெல்லாம் பதிலடி கொடுக்கும், அதை அமெரிக்கா எப்படி முறியடிக்க முடியுமென்ற விவரங்கள் அடங்கிய ஆவணங்களை எலான் மஸ்க்கிடம் வழங்கி விவாதித்ததாகக் கூறப்பட்டது. இதன்மூலம், அமெரிக்காவின் ராணுவ ரகசியம் கசிந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டது. ஆனால் அதை ட்ரம்ப் மறுத்துவந்தார். அத்தகவல் பொய்யென்று கூறினார். ஆனால், பென்டகனோ, எலான் மஸ்க்குடன் நடத்தப்பட்ட ஆலோசனையை ஒப்புக்கொண்டது. இது ட்ரம்புக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கடுப்பான ட்ரம்ப், இதுபோன்ற விவரங்களையெல்லாம் மஸ்க்கிடம் விவாதிக்கக்கூடாது என்று பென்டகனை கடிந்துகொண்டார்.

இந்நிலையில், அமெரிக்காவின் பட்ஜெட் தாக்கலுக்கு முன்பாக,

# ட்ரம்ப் vs எலான் மஸ்க்!

## -மோதல் பின்னணி!

செலவினங்கள் குறித்து ஆய்வுசெய்த எலான் மஸ்க்கின் குழுவினர், செலவுகளைக் கட்டுப்படுத்த அரசு ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, தனியார்மயமாக்குவது குறித்த ஆலோசனைகளை வழங்கினர். இதற்கு அமெரிக்கா முழுக்க கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில், அதிபர் ட்ரம்ப், புதிய வரிக்குறைப்பு மசோதாவை செனட் சபையில் தாக்கல் செய்துள்ளார். அம்மசோதாவில், எலான் மஸ்க் பரிந்துரை செய்திருந்த அனைத்துக்கும் நேர்மாறாக இருந்ததால் கொந்தளித்தார் எலான் மஸ்க். இதில் மக்களுக்கு அதிக வரிச்சலுகைகளை வழங்குவதாகவும், ராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்கீடும் இருந்தது. அதேபோல் வெளிநாட்டினர் குடியேற்றத்துக்கு எதிராகக் கடுமையான விதிமுறைகளைக் கொண்டிருந்தது. இதற்கெல்லாம் எலான் மஸ்க் தனது எதிர்ப்பைப் பதிவுசெய்தார்.

இதுகுறித்து கருத்து தெரிவிக்கையில், "எனது பணிக்கான கால அவகாசம் முடிவுக்கு வருவதால் வெளியேறுகிறேன். இந்த மசோதா முட்டாள்தனமானதாக இருக்கிறது. செலவுகளைக் கட்டுப்படுத்தும் பணிகளை என்னிடம் வழங்கிவிட்டு, தற்போது ஜெப்ரி எப்ஸ்டீனின் கருத்தின் அடிப்படையில் வரி குறைப்பு மசோதாவைத் தாக்கல் செய்வது சரியானதல்ல" என்று விமர்சித்துள்ளார்.

இந்த விமர்சனத்துக்கு பதிலளித்த ட்ரம்ப், "இந்த மசோதா குறித்து எலான் மஸ்க் முழுமையாக அறிந்திருக்கிறார். அப்படிப்பட்டவரே எதிர்ப்புக்குரல் எழுப்புவது ஏமாற்றமளிக்கிறது. அவருக்கும் எனக்குமான நல்ல உறவு இனி தொடருமா என்று தெரியவில்லை" என இருவருக்குமான நட்புக்கு என்ட் கார்டு போடும்விதத்தில் கூறியிருந்தார்.

எலான் மஸ்க்கோ, "இந்த மசோதா குறித்த விவரமெல்லாம் எனக்கு தெரியாது. என்னிடம் ஒருமுறைகூட காட்டவேயில்லை. ட்ரம்ப் நன்றி மறந்தவராக இருக்கிறார். நான் மட்டும் தக்க சமயத்தில் உதவி செய்யாவிட்டால் 2024ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் ட்ரம்ப் தோற்றிருப்பார்" என்று எக்ஸ் தளத்தில் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

எலான் மஸ்க்கின் இந்த கருத்து, ட்ரம்பின் தன்மானத்தையே சீண்டியதாக இருந்தது. அதையடுத்து, தனது அதிகாரத்தை வெளிப்படுத்தும் வகையில், "அமெரிக்க பட்ஜெட்டில் செலவினங்களைக் கட்டுப்படுத்த எனக்கும் தெரியும். எலானின் நிறுவனத்துக்கு வழங்கப்படும் அரசாங்க மானியங்கள், ஒப்பந்தங்களை நிறுத்தினாலே பில்லியன்கணக்கான டாலர்களை மிச்சப்படுத்திவிடலாம்" என்று, எலானின் தொழிலுக்கே வேட்டு வைப்பேனென்று மறைமுகமாக மிரட்டினார்.

எலான் மஸ்க்கும் பதிலடியாக, "எங்கள் ஸ்பேஸ் எக்ஸின் டிராகன் விண்கலம், தன் திட்டம் சார்ந்த செயல்பாடுகளை உடனடியாக நிறுத்துகிறது. அதேபோல், "அமெரிக்க அதிபர் பதவியிலிருந்து ட்ரம்ப்பை நீக்கிவிட்டு துணை அதிபரான ஜே.டி.வான்ஸை அதிபராக நியமிக்க வேண்டும்" என்றும் கருத்து தெரிவித்தார். இப்படியான மோதல்கள் பங்குச்சந்தையில் எதிரொலிக்க, எலான் மஸ்க்கின் டெஸ்லா நிறுவனத்தின் சந்தை மதிப்பு, 14.3% குறைந்ததால், ஒரேநாளில் சுமார் 150 பில்லியன் டாலர் அளவுக்கு நஷ்டமடைந்தது. இது டெஸ்லாவுக்கு மிகப்பெரிய அடியாகும்.

ட்ரம்ப் -எலான் மஸ்க் ஈகோ சண்டை இன்னும் உக்கிரமாகுமா? முடிவுக்கு வருமா என்பது போகப்போகத் தெரியும்!

**-தெ.சு.கவுதமன்**

# சிக்கலில் தி.மு.க சேர்மன்!

சங்கரன்கோவில் நகராட்சியின் 30 கவுன்சிலர்களில் 24 பேர் தி.மு.க. சேர்மன் உமாமகேஸ்வரிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவோம் என நகராட்சியின் பொறுப்பு கமிஷனரான நாகராஜனிடம் மனு கொடுத்தது அரசியல் வட்டத்தில் தகிப்பைக் கிளப்பியிருக்கிறது.

30 வார்டுகளைக் கொண்ட சங்கரன்கோவில் நகராட்சியில் அ.தி.மு.க. கவுன்சிலர்கள் 13, தி.மு.க. 9, அதன் கூட்டணியான ம.தி.மு.க. 2, காங் 1, எஸ்.டி.பி.ஐ. 1, சுயேட்சை கவுன்சிலர்கள் 4 என்று தி.மு.க.வின் கவுன்சிலர்கள் பலம் 17 என்ற லெவலில் இருப்பதால், தேர்தலுக்குப் பிந்தைய சேர்மன் தேர்வில் இரு தரப்பு போட்டியாளர்களுக்கும் சமவாக்குகள் கிடைக்க, குலுக்கல் முறையில் தி.மு.க.வின் உமாமகேஸ்வரி சேர்மனாக அறிவிக்கப்பட்டார்.

அவர் தேர்வானதிலிருந்தே விவகாரங்கள் பின்தொடர்ந்திருக்கின்றன.

மொத்த கவுன்சிலர்களின் வார்டுகளில் கட்டமைப்புகள், தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில்லை. தன்னையே வளர்த்துக்கொள்கிறார் என்று அ.தி.மு.க. கவுன்சிலர்கள், தி.மு.க. கவுன்சிலர்கள் 11 பேர் கைகோர்த்து 2022-ல் சேர்மன் உமாமகேஸ்வரி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தனர். ஆளும் கட்சித்தலைமைப் புள்ளிகளின் ஏற்பாட்டால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒருவழியாக நீர்த்துப்போகச் செய்யப்பட்டது.

NKN110625

13-வது வார்டின் கவுன்சிலரான நாராயணன், "திரளான மக்கள் வந்துசெல்கிற என்னோட வார்டு பணிகள் பற்றி பலமுறை நிர்வாகத்திடம் மனுக்கள் கொடுத்திருக்கிறேன். நகராட்சி அதிகாரி வர்றாக போறாக. நிலைமையத் தெரிஞ்சும் கண்டுங்காணாமப் போறாக. அம்மன் கோவிலைச் சுற்றி குண்டும்குழியுமான ரோடு. கழிவுநீர் வெளியேற்றப்படாமல் தேங்கிக்கிடந்து சுகாதாரக்கேட்டை ஏற்படுத்துது. சீர்பண்ணனும்னு மனு குடுத்தேன். 16 லட்சம் நிதி பாஸ் பண்ணப்பட்டு ஒரு வருஷத்துக்கும் மேலாச்சு. வேலையே நடக்கல. இப்ப மாறிப்போன கமிசனர்ட்ட நா அடிக்கடி வலியுறுத்தியும், நிதியில்ல பண்ட் வரட்டும், வரட்டும்னு ஒரு வருஷத்துக்கும் மேலா சொல்லிக் கழிச்சாங்க. ரோடு வேலை சீரமைப்பிற்கும் அஜண்டா வைச்சோம். அந்தப் பிளான ஸ்கீம் ஒர்க்ல போடுறோம்னு 2 வருஷமா சொல்லிக் கழிச்சிட்டே போயிட்டாங்க. சேர்மன்ட பேசணும்னு நெனைச்சா அந்தம்மா போன எடுக்கவேமாட்டாங்க.

மக்களுக்குப் பதில் சொல்ல முடியல. மனக்கொதிப்புல



சேர்மன் உமாமகேஸ்வரி

இருக்காங்க. நிதி வருது. டெண்டர் விடுறாக. அத சேர்மன் தரப்புகளே பினாமியா எடுக்காங்க. ஆனா வேல நடந்ததாவே தெரியல. எந்த ஒரு வேலைன்னாலும் அத தீர்மானமா வைச்சு அவுக பாஸ் பண்ற தோட சரி முடிஞ்சிரும். நகரின் சுகாதாரப் பணியோ பராமரிப்போ எந்தப் பணினாலும் சேர்மன் தரப்புதான் டெண்டர் எடுக்கமுடியும். உதாரணமா 30 வார்டுகள்லயும் உள்ள பைப்லைன், தண்ணீர் வால்வுகள், லீக்கேஜ் போன்ற பராமரிப்பிற்கான 40 லட்சத்திற்கான டெண்டர். அத சேர்மன் தரப்பே பினாமியா எடுத்தாக. இரண்டே லேபர்கள வெச்சு பராமரிப்பு பணிய பண்றாக. எப்டி முறையா வேலைநடக்கும். இதக் கேக்கவேண்டிய அதிகாரிக கேட்குறதில்ல. இதேபோலத்தான் குப்பைகள அள்ளுற டெண்டர் எடுத்தாலும் அதுக்கு முறையான லேபர்களப் போடுற தில்லை. வார்டுகள்ல எந்த ஒரு பணியும் நடக்காம சீர்கெட்டுப் போயிருக்கு. அவுகளுக் குத் தோதான நபர்களுக்கு டெண்டரைக் குடுத்து, மத்த வேலைகள முன் அனுமதிபெற்று செய்றாகன்னு முடிச்சிருவாக. இப்படி டெக்னிக்கா ஒரு பைபாஸ் வேலையைப் பண்றாக" என்றார் கொதிப்பாக.

8-வது வார்டு கவுன்சிலரான சரவணன், ''நாலு வருஷமாச்சு 30 வார்டுகள்லயும் முக்கியமான வேலை, வாறுகால் பணி, ரோடு, சுகாதாரப் பணிகள்னு எதுவுமே நடக்கல. வர்ற நிதிகள் என்னாச்சு? வார்டுகளோட பணிக்கு நிதி ஒதுக்கப்படலையேன்னு கேட்டா பதிலில்லை. ஆனா பழைய நிர்வாகத்தில வாங்குன கடனுக்கு வட்டிதான் கட்டிட்டு வர்றோம்னு பதில்சொல்றாக. பொது நிதியில்தான் ஓடுது. வர்ற தொகைய செட்கள் கட்ட, கடைகள் கட்ட, சின்னச் சின்ன பாலம்னு அவுகளுக்கு வர்ற வருமானத்தைப் பாத்துத்தான் பண்றாக. ஆனா வார்டுகளில எந்த ஒரு வேலயும் நடக்கல.



நம்பிக்கையில்லா தீர்மானத்துக்காக மனுகொடுத்த கவுன்சிலர்கள்

பேருந்து நிலையம் கட்டிமுடிச்சு 33 கடைகள் கட்டியாச்சு. ஒவ்வொரு கடைக்கும் கணிசமான லட்சங்கள்ல டெபாசிட். அதுலதான் இப்ப வண்டியே உருளுது. டோட்டலா வார்டு பணி முடங்கிப்போன தாலதான் ஒரு வாரத்துல கவுன்சிலைக் கூட்டி மெஜாரிட்டிய நிரூபிக்கணும்னு சேர்மனுக்கு கெடுவச்சி வலியுறுத்தி கமிஷனர்ட்ட மனு குடுத்துருக்கோம்" அழுத்தமாகச் சொன்னார்.

சேர்மன் உமாமகேஸ்வரியை லைனில் தொடர்புகொண்டோம், "30 வார்டுகள்லயும் வேலைகள் நடக்கத்தான் செய்கின்றன. அதை அதிகாரிகளும் கவனிக்கத்தான் செய்றாக. எங்க கட்சிக்காரங்களும் அந்தத் தீர்மானத்தை குடுத்திருக்காக. எங்க லைன்ல யாரும் டெண்டர் எடுக்கலை'' என்று சொல்லி லைனைத் துண்டித்த சேர்மன், மறுபடி நமது அழைப்பை ஏற்கவில்லை.

அண்மையில், பொது வாறுகால், சுகாதாரப் பணிகள் மேற்கொள்வதற்காக 8.70 கோடியும், அடுத்து பள்ளிக்கூடங்கள் பராமரிப்பு, புனரமைப்புப் பணிகளுக்கு 6 கோடி என்றும் நிதிகள் வந்திருக்கின்றதாம். இவைகளின் பலாபலன்களை எப்படி வைத்துக்கொள்வதென்று மன்ற கவுன்சிலின் மூன்று அதிகாரமிக்க பவர் சென்டர்களுக் கிடையேயான போட்டியின் விளைவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மான வலியுறுத்தல் என்று கிசுகிசுக்கப்படுகின்றது.

**-ப.இராம்குமார்**

## -சங்கரன்கோயில் திகுதிகு!

www.nakkheeran.in

# கோபுரக் கலசமும் சிறைச்சாலையும்!

கம்யூனிசம் ஒழிக என்று அவர்கள் வாயாலேயே சொல்ல வைக்கவேண்டும் என்பது அவர்களின் நோக்கம். இவர்களை, ஒழிக என்று சொல்ல வைப்பதால் கம்யூனிசம் ஒழிந்துவிடப் போவதில்லை. இதுபற்றி தோழர் நல்லகண்ணு தெரிவித்த தகவல்கள், மனித வக்ரத்தின் இன்னொரு ஆழத்தை நமக்கு உணர்த்துகிறது. இந்த வக்ரத்தை நடைமுறைப்படுத்த ஒரு விரிவான தயாரிப்பை சிறை நிர்வாகம் செய்து வைத்திருந்தது.


சில்லரைத் திருட்டுக்களில் ஈடுபடுபவர்களை, சிறைகளில் கறுப்பு குல்லா என்று அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. இவர்கள் கறுப்பு குல்லா அணியவேண்டும். குற்றங்களை இயல்பாக செய்யக்கூடியவர்கள். வெளியில் இருப்பதைவிட சிறைச்சாலைகளில் அதிகநாள் இருப்பவர்கள். இவர்களை சிறைப்பறவைகள் என்றும் அழைப்பார்கள். இவர்களை அவமானப் படுத்துவதற்காக இந்தமுறை இருந்திருக்கிறது. இந்த கறுப்பு குல்லாக்களை அடிப்பதையும் அவமானப்படுத்துவதையும் சிறை நிர்வாகம் ஒரு எழுதப்படாத சட்டமாக வைத் திருந்தது. கம்யூனிஸ்டுகளைக் கோபப்படுத்தி எரிச்சலடைய வைப்பதற்காக கம்யூனிஸ்டுகளை அந்த கறுப்பு குல்லாக்களை நடத்துவதைப்போல நடத்தத் தொடங்கினார்கள்.

‘மதுரை சிறையில் இதை நாங்கள் எதிர்கொண்டபோது மாபெரும் கலவரம் சிறைக்குள் நிகழத் தொடங்கியது’ என்கிறார் நல்லகண்ணு. ஆரம்ப காலங்களில் மிகவும் சர்வசாதாரணமாக இதைச் செய்யத் தொடங்கினார்கள் என்கிறார். இது குறித்த மேலதிக தகவல்களை தோழர். எம்.வி.சுந்தரம் எழுதிய ‘விடுதலைப் போராளியின் வாழ்க்கைப் பயணம்’ என்ற நூலில் அறிந்து கொள்ள முடிந்தது. நூல் மொத்தம் 906 பக்கங்களைக் கொண்டிருக்கிறது. இதில் துணை தலைப்புகளில் பல்வேறு குறிப்புகள் இருக்கின்றன. அதில் மதுரைச் சிறைச்சாலையில் கம்யூனிஸ்டுகள் எவ்வாறு இழிவுபடுத்தப்பட்டார்கள் என்ற விபரங்கள் இருக்கின்றன. தோழர் நல்லகண்ணு கூறிய பல விபரங்களை இந்த நூல் உறுதி செய்கிறது.

விசாரணைக் கைதிகள் தண்டனைக் கைதிகளாக மாறும் காலம் அது. தண்டனை பெற்ற கைதிகள் சோகம் நிறைந்தவர்களாக மத்திய சிறைச்சாலைக்கு வந்து சேருவார்கள். இவர்களை விசாரணை சிறையிலிருந்து தண்டனைச் சிறைக்கு காவல்துறையினர் அழைத்து வரவேண்டும். நீதிபதி வழங்கிய தீர்ப்பின் நகல் சிறை அதிகாரிகளிடம் வழங்கப்படும். அவர்கள் அதை சரிபார்ப்பார்கள். பின்னர்



படம்: AI தொழி




இவர்கள் சிறைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். இவ்வாறு தண்டனைக் கைதியாக மாறியவர்கள் மதுரை சிறைக்கு அழைத்துவரப்படும்போது நடப்பது இன்றைய மனித உரிமைக்கு முற்றிலும் விரோதமாக இருக்கிறது. இதுபற்றி தோழர் கூறிய பல விபரங்களை என்னால் எளிதில் அறிந்துகொள்ள முடிந்திருக்கிறது.

போலீஸ், சிறைக்காவலர்களிடம் ஒப்படைக்கும் தருணத்தில் சிலர் அருகில் இருப்பார்கள். இவர்கள் சிறைக் காவலர்களை விட அதிகாரம் கொண்டவர்களாக தங்களை காட்டிக் கொள்வார்கள். அவர்கள்தான் கன்விக்ட் வார்டர்கள். இந்த நடைமுறை பத்து ஆண்டுகளுக்கு முன் அகற்றப்பட்டுவிட்டது. இன்றைய சிறைகளில் கன்விக்ட் வார்டர்கள் இல்லை. கன்விக்ட் வார்டர்கள் ஆயுள் தண்டனை பெற்று, பல ஆண்டுகள் சிறையில் இருப்பவர்கள். ஆங்கிலேயர் காலத்து சிறை, இவர்களை வைத்தே, மற்ற குற்றவாளிகளை அடக்கும் தந்திரத்தைக் கொண்டிருந்தது. இவர்கள் சிறையில், கூண்டில் அடைத்து வைக்கப்பட்ட மிருகத்தைப் போல, சக கைதிகளின் மீது பாய்ந்து குதறக்கூடியவர்கள். இப்படி மதுரை சிறையில் கறுப்பு குல்லாக்களைபோல கம்யூனிஸ்டுகளை பயமுறுத்தி வைப்பதற்கு இவர்கள் பயன்படுத்தப்பட்டதை பற்றிய பல கதைகளை நான் இவரிடமிருந்து அறிந்துகொண்டிருக்கிறேன்.

தோழர் சுந்தரம், தன் நூலில் இதைப் பற்றி மிகுந்த துயரத்துடன் சில விபரங்களைக் கூறுகிறார்...

சிறையில் கம்யூனிஸ்டு கைதிகள் நுழைந்தவுடனேயே கன்விக்ட் வார்டர்கள் அவர்களைக் கைப்பற்றிக்கொள்வார்கள். இவர்கள் எவ்வாறெல்லாமோ அடிக்கத் தொடங்குவார்கள் இதற்கு தலைமை ஏற்று செயல்பட்டவர்களையும், அவர்களின் குற்றப் பின்னணியையும் தோழர் சுந்தரத்தால் சொல்லமுடிகிறது. கோபுரக்கலசம் திருடி விற்பனை செய்வதை ஒருவர், பெரும் தொழிலாகவே செய்துவந்திருக்கிறார். இவரும் ஒரு ஆலயத்தோடு தொடர்புடைய அய்யர். பெயர் இராமசாமி அய்யர். சிறையில் ஆயுள் தண்டனை பெற்று, இயல்பிலேயே தன்னிடம் அமைந்த கிரிமினல்தனத்தை சிறையில் கூடுதலாக வளர்த்துக்கொண்டவர்.

தனது கிரிமினல் குணத்தால். அதிகாரிகள் பலரை தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு. எதையும் செய்யமுடியும் என்ற ஆணவத்தை கொண்டவர் என்று தோழர் சுந்தரம் குறிப்பிடுகிறார். இவர் கம்யூனிஸ்டு கைதிகளை அடக்கி வைக்க நியமிக்கப்பட்டதாக சுந்தரம் தன் குறிப்புகளில்



–சி.மகேந்திரன்

இல்நுட்பம்

www.nakkheeran.in

Vol.38
Issue No:16
நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் : **nakkheeran2003@yahoo.com**
**nakkheeran2003@gmail.com**
இணையம்: **www.nakkheeran.in**

**முதன்மை பொறுப்பாசிரியர்: மாவலி**
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், இரா.த.சக்திவேல், ராம்கி
**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :**
க.சுப்பிரமணியன், சிவலிங்கம், கவுதமன்,
எம்.செந்தில்குமார், தா.மகாராஜன்
**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்
**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** சக்திவேல், எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங், செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்
**நிருபர்கள்:** அருண்பாண்டியன், மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:**
ச.ராஜேந்திரன்
**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** சி.பிரான்சிஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**சந்தா பிரிவு உதவியாளர்:** பார்த்திபன்
**முதன்மை காசாளர் :** பி.என்.ஆனந்த்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர் :** து.கண்ணன்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன், சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :** ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம், யூனூஸ், பாண்டியன்

Legal Manager : **பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**

**Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch**

சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.

எழுதியுள்ளார். இதைப்போன்று ஆத்துக்காட்டு ராமன், வாலி ஆகிய இருவரும் கொலை செய்து விட்டு ஆயுள் தண்டனை பெற்றவர்கள். கோபுரக்கலசம் ராமசாமியின் கூட்டத்தைச் சார்ந்தவர் என்கிறார். இவர்கள் மூவரும்தான் கம்யூனிஸ்டு களுக்கு அச்சத்தை வரவழைக்க நிர்வாகத்தால் மறைமுகமாக தயாரிக்கப்பட்டவர்கள்.

கம்யூனிஸ்டு தண்டனைக் கைதிகள் தங்கள் கைக்கு வந்தவுடனேயே கம்யூனிஸ்டுகள் ஒழிக என்று கோஷம் போடச்சொல்லி இந்த மூவரும் அடிக்கத் தொடங்குவார்கள். அடியென்றால் மரண அடி. இதில் பெரும்பாதிப்புக்குள்ளான வர்கள் சிலர். இதில் முக்கியமானவர்கள் மூவர் என்கிறார் தோழர் நல்லகண்ணு. இதற்குரிய காரணங்களை அவர் விளக்கியபோது நமக்கு பெரிதும் வியப்பைத் தருகிறது.

அடிவாங்கும் கம்யூனிஸ்டு கைதிகளில் சிலர், வாயைத் திறக்கமாட்டார்கள். சிலர் முணுமுணுப்பதை போல பாவனை செய்வார்கள். ஆனால் மூவரும், இதில் வேறுபட்டவர்கள். பெயர் காரைக்குடி டாக்டர் முத்தையா, தூத்துக்குடி பயில்வான் அருணாசலம். இராஜபாளையம் அலக் என்கிறார். கன்விக்ட் வார்டர்களால் இவர்கள் மீது அடிவிழும் நேரத்தில் ஒழிக என்று சொல்லவில்லை. முழு சக்தியையும் ஒன்றுதிரட்டி வாழ்க என்று முழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு கண்கள் சிவந்து கோபம் அதிகரிக்க, அடிகள் அதிகரிக்கின்றன. அதற்கு இணையாக கம்யூனிஸ்டுகள் வாழ்க என்ற முழக்கமும் அதி கரித்து, சிறையின் மதில் சுவர்களில் எதிரொலித்து மீண்டும் இவர் களுக்கு வந்தடைகிறது. கம்யூனிஸ்டுகளை மயக்கம் ஏற்படும் வரை அடிக்கிறார்கள். மயக்கத்தை தெளிவிக்க தண்ணீரில் மூழ்க வைத்து, மீண்டும் கண்விழித்தபோது, கம்யூனிஸ்டு கட்சி வாழ்க என்ற முணுமுணுப்பை இவர்களிடம் கேட்கிறார்கள். இதற்கு மேல் சிறை நிர்வாகத்தால் எதுவுமே செய்ய முடியவில்லை.

இதுபற்றிய விரிவான தகவல்களை தோழர் நல்லகண்ணுவிடம் பெற முடிகிறது. இந்த நடைமுறை பெரும்பாலான சிறைகளிலும் நடைபெறுகிறது என்ற தகவல் எங்களுக்கு கிடைத்தது என்கிறார். இந்தியாவின் வடக்கு பகுதி சிறையில் நடக்கும் தகவல்களை பார்வையாளர்களாக எங்களைச் சந்திக்கும் தோழர்கள் எங்களிடம் சொன்னார்கள் என்கிறார். அதிலும் சிறைக்காவலர்களில் சிலரும், சிறை அதிகாரிகளில் சிலரும் கட்சியின் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மூலம் சில தகவல்கள் கிடைக்கின்றன. இதை வைத்து ஒவ்வொரு சிறைச்சாலையிலும் ஒரு முன்னெடுப்பு உருவாக்கம் பெறுகிறது என்கிறார்.


இந்த முன்னெடுப்பு சாதாரண முன்னெடுப்பாக இல்லை. பத்திரிகைகளில் செய்தியாக கசிந்து வெளிவரத் தொடங்கியது. இந்த பத்திரிகைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு சுதந்திரத்திற்கு பின்னர் அமைக்கப்பட்ட சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்களில் இது காரசாரமான விவாதத்தை உருவாக்கியது என்கிறார்.

**(தொடரும்)**


ஜிங்கா கோல்டு™
GOOD MANUFACTURING PRACTICE
GMP
CONSISTENT QUALITY
CERTIFIED
ISO
9001:2008
COMPANY
Jinga Gold™
IT ONLY TAKES ONE
4 CAPSULES
4 கேப்சூல்ஸ்
ரூ.600/-
மட்டுமே
ஒன்னு போதும்
நின்னு பேசும் !
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY
MedPlus
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
SUPER STOCKIST
SRUTI'S
மாவட்ட வாரியான உதவிக்கு
90036 40742
ஹெல்ப் லைன்
9962 66 4444
For Personal Delivery
9962 808090

Advt

வீட்டுச் சாவி மற்றும் பத்திரம் பெற்றுக்கொண்ட எழுத்தாளர் தேவிபாரதி





# கலைஞரின் கனவு இல்லம்! எழுத்தாளர்களுக்கு மகுடம்!

கலைஞர் விரும்பிய எழுத்துத்துறைக்கு தொடர்ந்து பெருமை சேர்த்து வருகிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். அவர் தலைமையிலான அரசில், படைப்பாளிகளை பெருமைப்படுத்தும் விதமாக, இந்தியாவில் வேறெந்த மாநில அரசும். ஏன் ஒன்றிய அரசே செய்யாத ஒரு வியத்தகு சாதனையை அமைதியான முறையில் செய்து வருகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் சாகித்திய அகாடமி விருதுக்குழு, மாநில மொழிகளில் ஆகச்சிறந்த படைப்புகளை தருகிற இலக்கியவாதிகளைத் தேர்ந்தெடுத்து சாகித்திய அகாடமி விருது வழங்குகிறது. தமிழ் எழுத்தாளர்கள் அசோகமித்திரன், பிரபஞ்சன், புவியரசு, ஈரோடு தமிழன்பன், பொன்னீலன் என ஏராளமான ஆளுமைகள் சாகித்திய அகாடமி விருது பெற்றுள்ளார்கள். விருதாளர்களுக்கு ஒரு லட்ச ரூபாய் ரொக்கப் பணமும், பாராட்டுப் பத்திரமும், விருதுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், 2021-ல் தி.மு.க. அரசு அமைந்து, முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றவுடன், எழுத்தாளர்களை உயர்ந்த இடத்தில் வைத்து கௌரவிக்கும் வகையில், 'கலைஞர் கனவு இல்லம்' என்ற புதிய திட்ட அறிவிப்பை வெளியிட்டார். ஒவ்வொரு ஆண்டும் சாகித்திய அகாடமி விருதுபெறும் தமிழ் எழுத்தாளர்களுக்கும், மொழிபெயர்ப்புக்கான சாகித்திய அகாடமி விருதுபெறும் தமிழ் எழுத்தாளர்களுக்கும், தமிழக அரசு சார்பில் புதிதாக அறிவிக்கப்பட்ட 'கலைஞர் செம்மொழி விருது' பெறுபவர்களுக்கும் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் மூலம் அவர்கள் விரும்பும் இடத்தில் சொந்தமாக வீடு வழங்கப்படும் என்பதுதான் அந்த அறிவிப்பு. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டி முடிக்கப்படும் வீடு ஒன்றை விருதாளர்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் சாகித்திய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளர்கள் சிற்பி பாலசுப்பிரமணியம், புவியரசு, ஈரோடு தமிழன்பன் உட்பட பலரும் சொந்தமாக தமிழக அரசு வழங்கிய வீட்டைப் பெற்றுள்ளார்கள். 2023-ம் ஆண்டு, ஈரோட்டை சேர்ந்த எழுத்தாளர் தேவிபாரதி எழுதி வெளிவந்த 'நீர்வழிப் படூஉம்' நாவல் சாகித்திய அகாடமி விருது பெற்றது. எழுத்தாளர் தேவிபாரதி தமிழக அரசிடம் கலைஞர் கனவு இல்ல வீடு வேண்டி விண்ணப்பித்திருந்த நிலையில் அவருக்கு திடீரென உடல்நிலை சரியில்லாமல் போனது. வலிப்பு நோய் ஏற்பட்டு ஈரோடு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். பொருளாதாரரீதியாக எந்த பின்புலமும் இல்லாத நிலையில் எழுத்தாளரின் மருத்துவச் சிகிச்சை கேள்விக்குறியாகி மிகவும் நெருக்கடியான நிலை ஏற்பட்டது. இலக்கிய நண்பர்கள்

www.nakkheeran.in



அமைச்சர் சாமிநாதனுக்கு நன்றி தெரிவித்த தேவிபாரதி
-உடன் நமது நிருபர் ஜீவாதங்கவேல்



சிலருக்கு தகவல் தெரிந்து அவர்களால் முடிந்தவரை உதவினார்கள். சிகிச்சைக்கு கூடுதலான செலவு ஏற்பட்ட நிலையில், எழுத்தாளருக்கு மருத்துவ உதவி தேவைப்படுகிறது என்கிற தகவலை முதல்வரின் பார்வைக்கு நக்கீரன் சார்பாகக் கொண்டு சென்றோம். ஒருமாத காலம் சிகிச்சையில் இருந்த எழுத்தாளர் தேவிபாரதியின் முழு மருத்துவச் செலவையும் தமிழக அரசே ஏற்றுக்கொண்டது.

அடுத்ததாக, எழுத்தாளர் தேவிபாரதி, கலைஞரின் கனவு இல்லம் பெறுவதற்கான தொடர் பணிகளையும் நக்கீரன் சார்பாக முன்னெடுத்தோம். தமிழ் வளர்ச்சித் துறையின் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தனது துறையின் அதிகாரிகளை வேகமாக செயல்பட வைத்தார். தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குனர் ஔவை அருள், இதற்கான நடவடிக்கையில் துரிதமாக ஈடுபட்டார். நக்கீரனின் முயற்சி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துச்சாமி மற்றும் அதிகாரிகளின் தொடர்ச்சியான, துரிதமான பணிகளால், சென்னை, செனாய் நகர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பிலுள்ள வீடு தேர்வு செய்யப்பட்டது.

ரூபாய் ஒரு கோடியே 40 லட்சம் மதிப்பு கொண்ட அந்த வீட்டின் பத்திரப்பதிவு மே 30ஆம் தேதி நடைபெற்று, வீட்டின் பத்திரம் மற்றும் சாவியை எழுத்தாளர் தேவிபாரதியிடம் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குனர் ஔவை அருள் ஒப்படைத்தார். அதிகாரிகள் மற்றும் அமைச்சரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்த எழுத்தாளர் தேவிபாரதி நம்மிடம், "முதல்வர் மூலம் எனக்கு மருத்துவ உதவி மற்றும் வீடுபெறும் நிகழ்வுகளுக்கு உறுதுணையாய் இருந்த நக்கீரனுக்கு நன்றி" என்றவர், மேலும்,

"சாகித்திய அகாடமி விருது பெற்றவர்களுக்கு ஒன்றிய அரசு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து பாராட்டி அனுப்பிவிடுகிறது. ஆனால் தமிழக அரசு சொந்தமாக வீட்டை கொடுத்து எங்களைப் போன்றவர்களை வாழ்நாள் முழுக்க நம்பிக்கையோடு வாழ வைக்கிறது. இன்றுவரை எழுத்தாளர்கள், அவர்களின் தனிப்பட்ட வாழ்வு என்பது வறுமையோடு பின்னிப் பிணைந்தது தான். அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்வியல் நம்பிக்கையை தமிழக அரசு, குறிப்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தந்துள்ளார் என்பதை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்" என்றார்.

மறைந்தாலும், தமிழ்நாட்டின் படைப்பாளிகளுக்கு, எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம் தந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார் கலைஞர்!

**-ஜீவா தங்கவேல்**

பிறரால் காயப்பட்டவர்களை விட... பிடித்தவர்களால் காயப்பட்டவர்கள்தான் அதிகம்!

# மருத்துவர்களே இல்லாமல் அரசு தலைமை மருத்துவமனை! மயிலாடுதுறை அவலம்!

மயிலாடுதுறை நகரத்தின் மையப் பகுதியில் இயங்கிவருகிறது அரசு பெரியார் தலைமை மருத்துவமனை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1880-ல் வெஸ்டர் ஹாஸ்பிடலாகத் தொடங்கப்பட்டு, பிறகு 1928-ல் நகராட்சி மருத்துவமனையாக தரமுயர்ந்து, 1990 முதல் அரசு பெரியார் பொது மருத்துவமனை எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு இயங்கிவருகிறது. தற்போது மாவட்டத்திலுள்ள 200-க்கும் அதிகமான கிராமங்களின் பிரதான தலைமை மருத்துவமனையாக செயல்பட்டுவருகிறது.

தினசரி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநோயாளிகளும் 500-க்கும் மேற்பட்ட உள்நோயாளிகளும் இந்த மருத்துவமனையை நம்பியே சிகிச்சை பெற்றுவருகின்றனர். கடந்த ஒருசில ஆண்டுகளுக்கு முன்புவரை வருடத்திற்கு 3,700 அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருவதாகவும், இந்த மருத்துவமனை தமிழக அளவில் சிறந்த மருத்துவமனைகளுள் ஐந்தாவது இடத்தைப் பிடித்ததாகவும் கூறும் ஊழியர்கள், சமீபகாலமாக ஊழியர்கள், மருத்துவர்களின் பற்றாக்குறை, அலட்சியத்தால் இந்த மருத்துவமனை படுமோசமான நிலைக்கு போய்விட்டதாக கவலைப்படுகிறார்கள்.


பலியான முபின் அலி

இரண்டு மாதங்களுக்கு முன்பு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியே இந்த மருத்துவமனையின் அவலநிலைகளைக் கண்டித்து பெரும் போராட்டம் நடத்தச்சொன்னார். வாரம் இரண்டு போராட்டங்கள் என்கிற அளவிற்குப் போய்விட்டது. இறப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பதும், அதற்கு பொறுப்பற்ற பதிலும்தான் பொதுமக்களையும் சமூக ஆர்வலர்களையும் வீதிக்கு வந்து போராடவைத்திருக்கிறது.

சமீபத்தில் மரத்துறை என்கிற கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண் பிரசவத்திற்காக வந்தார். வலி அதிகமானதால் அந்தப் பெண்ணின் உறவினர்கள் அறுவை சிகிச்சை செய்தாவது குழந்தையையும், தாயையும் காப்பாற்றுங்க என காலில் விழுந்து மன்றாடியுள்ளனர். ‘மருத்துவர்கள் இல்லை, சுகப்பிரசவம் நடந்திடும் வலியைப் பொறுத்துக்கோங்க’ என காத்திருக்கவைத்து அந்த குழந்தை இறந்துபோக, ஆத்திரமான உறவினர்களும் பொதுமக்களும் சாலைக்கு வந்து போராடினர். அதே போல சாதாரண சளி பிரச்சனை என வந்த பெண் ஒருவருக்கு இரண்டுநாள் வைத்தியம்



அரசு பெரியார் தலைமை மருத்துவ மனை

## மன பலம் இழந்துவிட்டால் உன் உடல் பலம் ஒன்றுக்கும் உதவாது; அதனால் தைரியமாக இரு நீ எப்போதும்!

பார்த்துவிட்டு இனி இங்க பார்க்கமுடியாது என திருவாரூர் மருத்துவக் கல்லூரிக்கு அனுப்ப, அங்கு சிகிச்சை துவங்கும் முன்பே பரிதாபமாக இறந்துபோனார். மணல்மேடு பகுதியைச் சேர்ந்த ஒருவர் வயலில் ஏதோ கடித்துவிட்டதாக வந்தவருக்கு விஷக்கடி வைத்தியம் பார்க்காமல் திருவாரூருக்கு அனுப்ப, அவரும் பரிதாபமாக இறந்து போனார். இப்படி இவர்களால் அலைக்கழிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகம்.

அப்படியொரு சம்பவம்தான் மாவட்ட மருத்துவமனையையே ஸ்தம்பிக்கவைத்துள்ளது. மயிலாடுதுறை அருகே எலந்தங்குடி பரகத் தெருவைச் சேர்ந்த முஹம்மது காசிம் என்பவரது மகன் முபின்அலி. 14 வயதான அந்த சிறுவன் மே 31-ஆம் தேதி மாலை வீட்டுக்கருகில் விளையாடியிருக்கிறான், அப்போது ஏதோ பூச்சி காலில் கடித்துள்ளது. அதை வீட்டிலுள்ளவர்களிடம் சொல்லியபடியே மயங்கி விழுந்துள்ளான். பதறிப்போன பெற்றோர்கள் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்குக் கொண்டுவந்தனர். அங்குள்ள மருத்துவர்கள் முறையாக சிகிச்சையளிக்காமல் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில் ஜூன் 1-ஆம் தேதி மாலை சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான். மாணவனின் உடலை சோதித்த திருவாரூர் மருத்துவர்கள், மயிலாடுதுறை அரசு மருத்துவனையிலேயே விஷக்கடிக்கான முறையாக சிகிச்சையளிக்காமல் காலதாமதப் படுத்தியதால் உயிரிழந்துள்ளான் என கைவிரித்துள்ளனர். ஆத்திரமடைந்த பெற்றோர்களும், உறவினர்களும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனை நிர்வாகத்தைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஆதரவாக எஸ்.டி.பி.ஐ., விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சியினர் திரண்டுவந்து சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில், 'மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் நியமிக்கவேண்டும், முறையான சிகிச்சையளிக்காத டாக்டர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும், சி.டி., எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் ரத்தப் பரிசோதனை முடிவுகள் உடனுக்குடன் அளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் இருந்த சமூக ஆர்வலரும், ஊராட்சிமன்றத் தலைவருமான தமிழ்த்தென்றல் கூறுகையில், "இந்த மருத்துவமனை இந்த மாவட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் வாழும் விளிம்புநிலை மக்களின் உயிர்நாடி. இதனை விரிவுபடுத்தி, மேம்படுத்தவேண்டும் என்று நாங்கள் ஒவ்வொரு அரசிடமும் கோரிக்கை வைக்கிறோம், அதிகாரிகளிடம் முறையிடுகிறோம், ஆனால் அவர்கள் எழைகளுக்கானது என்பதால் அலட்சியமாகக் கடந்துவிடுகின்றனர். இந்த பெரியார் மருத்துவமனையில் சுமார் 1.5 கோடி செலவில் சி.டி. ஸ்கேன் வசதி உருவாக்கப்பட்டது. சிறுநீரக நோயாளிகளுக்கு டயாலிஸிஸ் கருவி, காசநோயால் பாதிக்கப்பட்டோருக்கு நவீன காசநோய் கண்டறியும் கருவி என மருத்துவ உபகரணங்களை ஆளும் அரசு கொண்டுவருகிறது. அதற்கான கட்டடங்களும் அடுக்கடுக்காக கட்டிவைத்துள்ளனர்... என்ன பயன்? போதிய மருத்துவர்களோ, செவிலியர்களோ, ஊழியர்களோ இல்லாமல் கட்டடமாக தரமுயர்ந்து நிற்கிறது. சாதாரண காய்ச்சலுக்குக் கூட முதற்கட்ட சிகிச்சையளிக்காமல் திருவாரூர் மருத்துவக்கல்லூரிக்கு அனுப்பிவிடும் நிலைதான் இங்கு தொடர்கிறது. கட்டடங்கள் வளர்ந்திருக்கிறதே தவிர மருத்துவத் தரம் உயரவில்லை'' என்கிறார்.

இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட



மருத்துவமனை முன்பு போராட்டம்



www.nakkheeran.in

## தவறு செய்தால் ஒத்துக்கொள்ளுங்கள், விரைவில் சரி செய்துகொள்ளலாம் -ஆனால், செய்த தவறை இல்லை என்று சாதிக்காதீர்கள்... என்றுமே சரி செய்ய முடியாது!

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட தலைவர் மோகன்குமார், "இந்த மாவட்டம் விவசாயத்தை நம்பியிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் வசிக்கின்ற பகுதி. தினசரி கூலி வேலைகளுக்கு சென்று அன்றாடம் வயிற்றுப்பிழைப்பு நடத்துகின்ற சாமானிய மக்கள் அதிகம். இங்கு சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவர்கள் இல்லை. 45 டாக்டர்கள் இருக்கவேண்டிய இடத்தில் வெறும் 6 பேர் மட்டுமே இருப்பதாகக் கூறுகிறார்கள். அவசர சிகிச்சைப் பிரிவில் ஒருவர்கூட இருப்பதில்லை. செவிலியர்கள் பற்றாக்குறை, ஊழியர்கள் பற்றாக்குறை, ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் துப்புரவு ஊழியர்கள் மட்டுமே மருத்துவர்களைப்போல சிகிச்சையளிக்கும் இடங்கள் வரை செயல்படுகின்றனர். சமீப காலத்தில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகம், அதனை மூடி மறைத்து விடுகின்றனர்.



எம்.எல்.ஏ. ராஜ்குமார்



தமிழ்த்தென்றல்

கிட்டத்தட்ட இந்த மருத்துவமனை போஸ்ட் ஆபீஸ் செய்யும் வேலையைத்தான் செய்கிறது. இங்கே நோய்வாய்ப்பட்டு வருபவர்களை, விசாரிக்காமல், முதற்கட்ட பரிசோதனைகூட செய்யாமல் அவசர அவசரமாக திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ரெபர் செய்வதுதான் இவர்களின் வாடிக்கை. இங்கே வேலைபார்க்கும் மருத்துவர்கள் பெரும்பான்மையாக வெளியில் மருத்துவமனைகள் வைத்திருப்பதால், அவர்களின் சிந்தனை முழுக்க முழுக்க அவர்களின் மருத்துவமனைமீதே இருக்கிறது. கர்ப்பிணிப் பெண்களை ஒரு குறிப்பிட்ட தனியார் ஸ்கேன் சென்டரில்தான் ஸ்கேன் செய்து வரவேண்டும் என்கிற விதியே இருக்கிறது. அறுவைச் சிகிச்சைக்கான மருந்து மாத்திரைகள் உள்ளிட்ட பொருட்கள் அனைத்தும் இங்கு கிடைக்கும் என மருத்துவமனைக்கு எதிரேயுள்ள மருந்துக் கடையில் போர்டு வைத்திருக்கும் அளவிற்கு இந்த மருத்துவமனையின் அவலம் கூடிக்கொண்டே இருக்கிறது. இதனை தமிழக முதல்வர் முழுக்கவனம் செலுத்தி மருத்துவர்களை நியமித்து விளிம்புநிலை மக்களின் உயிரைக் காத்திடவேண்டும்" என்கிறார்.

சமூக செயற்பாட்டாளர் ஒருவர் கூறுகையில், "மயிலாடுதுறை புதிய மாவட்டமாக ஆனது அரசியல்வாதிகளுக்கும், எம்.எல்.ஏ., எம்.பி. நகர்மன்ற தலைவருக்கும்தான் கொண்டாட்டம். மாவட்ட ஆட்சியர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதும் அதனை படம்பிடித்து வெளியிடுவதும்தான் வேலையாக வைத்திருக்கிறாரே தவிர மருத்துவமனையின் அவலங்களை கண்டுகொள்ளவில்லை. மாவட்ட எஸ்.பி. போலீஸ் படைகளோடு வலம்வருகிறாரே தவிர மருத்துவமனைகள், பள்ளிகள் உள்ள சாலைகளில் இருக்கும் ஆக்கிரமிப்பு, டிராபிக் பிரச்சனைகளைக் கண்டுகொள்வதில்லை.

கல்லூரிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் உள்ள பகுதிகள் ஒவ்வொரு நிமிடமும் கூட்ட நெரிசலில் சிக்கித்தவிக்கிறது. இதனை மாவட்ட காவல் கண்காணிப்பாளரோ, ஆட்சியரோ, எம்.எல்.ஏ.க்களோ பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. அப்படியிருக்க ஏழைகள் பயன்பெறும் மருத்துவமனையை எப்படி கண்டுக்குவாங்க?" என்கிறார் வேதனையோடு.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் கேட்டோம், "மருத்துவமனையில் தனிக் கவனம் செலுத்தி வருகிறோம். கடந்த காலங்களைப் பற்றி தெரியல, இனி இதுபோன்ற தவறுகள் நடக்காது. மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்" என்று துண்டித்துக் கொண்டார்.

மயிலாடுதுறை காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமாரோ, "மயிலாடுதுறை மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை அதிகம். அதனால் தினம் தினம் பிரச்சனை வருகிறது என்பதும் உண்மை. மருத்துவர்கள் போஸ்டிங் போட்டதும், ஆர்டர் காப்பியோட டிரான்ஸ்பருக்காக வந்துடுறாங்க. சமீபத்தில் 16 டாக்டர்களுக்கு இங்கு ஆர்டர் கொடுத்தாங்க. ஒருத்தர்கூட வந்து ஜாய்ண்ட் பண்ணல, இங்கு வந்து தங்க போதிய வசதியில்ல. அதனால் யாரும் இங்க வரத் தயங்குறாங்க, கவுன்சில்ல நடவடிக்கை எடுத்தால்தான் உண்டு" என்கிறார் வேதனையோடு.

மருத்துவம் சேவையாக இருந்த காலம்போய், தொழிலா மாறிடுச்சி!

**-க.செல்வகுமார்**



# ஆன்லைன் சூதாட்டம்! புதைகுழியில் சிக்கும் பெண்கள்!

**–எச்சரிக்கை ரிப்போர்ட்!**

இளம் குடும்பத் தலைவிகள் மொபைலில் ரம்மி, கேம்ஸ், இணையதள எம்.எல்.எம். போன்ற சூதாட்டங்களில் சிக்கி பணத்தை இழப்பதோடு, அப்பணத்தை கணவருக்கோ , குடும்பத்துக்கோ தெரியாமல் தயார் செய்யவேண்டும் என்ற நிலையில் அதுமுடியாமல் போய் உயிரை மாய்த்துக் கொள்வது ஒருபுறமென்றால், மற்றொருபுறம் பணத்துக்காக மீளமுடியாத சாத்தான்களிடம் பெண்கள் சிக்குவதாகக் கிடைக்கும் தகவல்கள் அதிர்ச்சியைத் தருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம் வல்லத்திர கோட்டை காவல் சரகம் பூவரசகுடி கிராமத்தைச் சேர்ந்த சரத்குமார், எதிர்வீட்டில் இருந்த ஸ்ரீகாவை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்துள்ளார். இவர்களுக்கு இரண்டரை வயதில் தன்ஷிகா என்ற பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில் ஓராண்டுக்கு முன்பு சிங்கப்பூருக்கு வேலைக்குச் சென்றுவிட்டார் சரத்குமார். கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு தனது மகளின் இரண்டாவது பிறந்தநாளுக்காக சொந்த ஊருக்கு வந்துவிட்டுச் சென்றுள்ளார்.

எப்போதும் மொபைலும் கையுமாகவே இருந்துள்ளார் ஸ்ரீகா. சிலநேரங்களில் மகள் பசிக்காக அழும்போதும் மொபைலும் கையுமாக இருந்துள்ளார். அதேநேரத்தில் சரத்குமாரின் வங்கிக் கணக்கிலிருந்து பணம் குறைவதைப் பார்த்து மனைவியிடம் கேட்டுள்ளார். தன் கணவரிடம் தயங்கித் தயங்கி 'ஆன்லைனில் 'ட்ரீம் 11' விளையாடினேன், அதில் பணம் போய்விட்டது' எனச் சொல்லி அழுதுள்ளார். 'போனது போய்டுச்சி விடு... இனிமே விளையாடுன அவ்ளோதான்' என ஆறுதலாகவும், மிரட்டலாகவும் சொல்லியுள்ளார். அப்போது அவர் தலையாட்டினாலும், ஆன்லைன் என்னும் சாத்தான் அவரை விடவில்லை, அவரை மீண்டும் விளையாட இழுத்துள்ளது.

கணவன் கண்டித்த பிறகும், விட்ட பணத்தைப் பிடிப்போம் என ஸ்ரீகா மீண்டும் 'ட்ரீம் 11' விளையாடத் தொடங்கியுள்ளார். அடுத்து 70 ஆயிரம் ரூபாய் இழந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. கணவன் வெளிநாட்டில் கூலி வேலை செய்து அனுப்பிய பணம் பேங்க் அக்கவுண்டில் இல்லாததை அறிந்து, மனைவியிடம் விசாரித்து மீண்டும் கண்டித்துள்ளார். இதனால் ஸ்ரீகா மனஉளைச்சலில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்நிலையில் கடந்த மே 31ஆம் தேதி கணவர் வீட்டின் எதிரே உள்ள தன் பெற்றோர் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் ஸ்ரீகா. அவரது காலுக்குக் கீழே குழந்தை இறந்த நிலையில் பெட்ஷீட்டில் மூடப்பட்டு கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சியடைந்து கண்ணீர்விட்டுக் கதறியுள்ளனர். தகவலறிந்து வல்லத்திரகோட்டை காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று இறந்துகிடந்த சிறுமியின் உடலை மீட்டதுடன், தூக்கில் தொங்கியபடி சடலமாகக் கிடந்த ஸ்ரீகாவின் உடலையும் மீட்டு புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தனர். போலீசாரின் தொடர்விசாரணையில் 'ஆன்லைன் விளையாட்டில் தொடர்ந்து பணத்தை இழந்ததற்காக, தன் குடும்பத்தினர் தன்மீது கோபப்படுவார்களே என்று நினைத்து குழந்தையைக்



கொன்றுவிட்டு, தாயும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம்' என்கின்றனர்.

**சம்பவம் 2:**

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் காவல் சரகத்திலுள்ள ஒரு கிராமத்தில் வசிக்கிறார் இந்த இளம்பெண். கடந்த சில மாதங்களில் மட்டும் மொபைல் வழியாக விளையாடிய ஆன்லைன் சூதாட்டத்தில் சுமார் ரூ.1 லட்சத்து இருபதாயிரம் வரை இழந்து கடன்பட்டுள்ளார். இந்த 1.2 லட்ச ரூபாய் பணத்தை குடும்பத்துக்குத் தெரிந்த நண்பர்களிடம் கடன் வாங்கியதை அறிந்த குடும்ப உறுப்பினர்கள், நம்ப பொண்ணு இப்படி செய்யாதே என்னவா இருக்கும் என விசாரித்தபோது, ஆன்லைன் சூதாட்டத்தில் பணம் இழந்திருப்பது தெரிந்து அதிர்ச்சியாகியுள்ளனர். 'படிச்ச பொண்ணு இப்படியா செய்வ?' என கண்டித்துள்ளனர். அதோடு, அவரிடமிருந்து மொபைல்போனைப் பிடுங்கிக்கொண்டுள்ளனர். 'அதை விளையாடுபவர்களையும், அதிலிருந்து மீண்டவர்களும் இழந்த பணத்தை மீட்கவேண்டும் என மீண்டும், மீண்டும் சூதாட இழுப்பதுதான் இந்த விளையாட்டுகளின் ஆபத்து' எனச் சொல்கிறார்கள்.

**சம்பவம் 3:**

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள ஒரு பேரூராட்சியைச் சேர்ந்த இல்லத்தரசி அவர். தொழில் செய்யும் கணவர், மேல்நிலைப்பள்ளி செல்லும் பிள்ளைகள் என அழகான குடும்பம். வீட்டில் தனியாக இருந்துவருகிறார். மனைவிக்கு விலையுயர்ந்த ஆன்ட்ராய்ட் செல்போன் வாங்கித் தந்துள்ளார் கணவர். அதில் இன்ஸ்டாகிராம், யூடியூப்பில் கணக்கு தொடங்கி ரீல்ஸ்கள் பார்க்கத் துவங்கியுள்ளார். சில மாதங்களில் அவரின் போக்கு மாறத் தொடங்கியுள்ளது, இரவு நேரங்களில் மொபைலில் அதிக நேரம் இருந்துள்ளார். என்னம்மா செய்யற? என கணவர் கேட்டபோது, ரீல்ஸ் பார்ப்பதாகச் சொல்லியுள்ளார். மனைவி சொன்னதை அப்படியே நம்பியுள்ளார். ஒரே மாதத்தில் 2.10 லட்சம் ரூபாய் அப்பெண்ணின் வங்கிக் கணக்கிலிருந்து காலியாகியிருந்தது. அதில் சுமார் 1.5 லட்சம் உறவினர்களிடம் கடன் வாங்கியது. பணம் தந்தவர்கள் திரும்பக் கேட்க, அவரால் என்ன பதில் சொல்வது எனத் தெரியவில்லை.

கணவருக்குத் தெரியாமல் சைபர் க்ரைம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் தந்துள்ளார். எப்படி பணம் போச்சு என போலீஸார் விசாரித்தபோது, இணையத்தில் ஒரு நிறுவனம் எங்களிடம் பொருள் வாங்கி அதனை எங்கள் வழியாக விற்றால் இரட்டை லாபம் கிடைக்கும் எனச்சொல்லியுள்ளனர். அதனை நம்பி முதல்கட்டமாக 7 ஆயிரம் ரூபாய்க்கு பொருள் வாங்கியுள்ளார். அடுத்த 12 மணி நேரத்தில் உங்க பொருள் வித்துடுச்சி, உங்களுக்கு 15 ஆயிரம் லாபம் என்றுள்ளனர். ஆஹா, 12 மணி நேரத்தில் டபுள் மடங்கு லாபம் என நினைத்த அப்பெண், அடுத்த ஸ்டேஜாக 25 ஆயிரத்துக்கு வாங்கியுள்ளார். மறுநாள் இரட்டிப்பு லாபம் என்றுள்ளார்கள்.

இதுபோதும் என அவர் மனம் நினைத்தபோது, இந்த பணம் உங்க கைக்கு வருவதற்கு ஒரு மாதமாகும், உங்க வங்கிக் கணக்கைத் தாருங்கள் எனச்சொல்லி டெலிகிராம் வழியாகப் பேசியுள்ளனர். இவரும் தனது வங்கிக் கணக்குகள், ஃபான் எண் போன்றவற்றை இணைத்துள்ளார். அடுத்ததாக இதில் கோல்டன் மெம்பராக சேர்ந்தால் 3 மடங்கு லாபம் என ஆசை காட்டியுள்ளார். இதற்கு 50 ஆயிரம் கட்டச்சொல்ல... இவரும் அதற்கு ஆசைப்பட்டு உறவினர்கள், நண்பர்களிடம் ரொம்ப அவசரம் எனச்சொல்லி 50 ஆயிரம் வாங்கிக் கட்டியுள்ளார். அடுத்த ஒரு மணி நேரத்தில் நீங்கள் வாங்கிய



**ஆன்லைன் கேம்ஸ், ரம்மி போன்றவை ஒருவர் தெரிந்தே செய்யும் தவறுகள். பணம் சம்பாதிக்கவேண்டும், அது வேலையே செய்யாமல் சுலபமாக கிடைக்கவேண்டும் என நினைக்கும் மனோபாவம்தான் இதற்கு முழுக்காரணம்.**

## நம் எல்லையில் நாமே நின்றுவிட்டால் கௌரவம்; மற்றவர்கள் நிறுத்தினால் அது அவமானம்!

பொருள் நட்டத்துக்குப் போனது, அதனால் உங்களுக்கு நட்டம், நீங்கள் கட்டிய தொகையிலிருந்து 30 ஆயிரம்தான் கிடைக்கும் எனச்சொல்ல அதிர்ச்சியாகியுள்ளார். விட்டதைப் பிடிக்கவேண்டும் என மீண்டும் நண்பர்களிடம் கடன் வாங்கி மீண்டும் 50 ஆயிரம் டெபாசிட் செய்துள்ளார், இந்தமுறை 20 ஆயிரம் தான் கிடைக்கும் எனச் சொல்லியுள்ளார்கள்.

அடுத்து ஒரு லட்ச ரூபாய் பேக்கேஜ் எனச்சொல்ல, அதற்கும் பணம் கட்ட நண்பர்களிடம் கடன் வாங்க முயற்சித்துள்ளார்.



சடலமாக...



குழந்தையுடன் ஸ்ரீகா

நெருங்கிய தோழி விவரம் கேட்டறிந்து, இதெல்லாம் சீட்டிங் எனப் புரிய வைத்து அவரை புகார் தரச்சொல்ல, என் கணவருக்குத் தெரிந்தால் அவ்ளோதான் என அழுதுள்ளார். அவரை சமாதானப்படுத்தி நான் காம் நபருக்குத் தெரியாமல் புகார் தந்துவிட்டு பணம் திரும்பவந்துவிடும் எனக் காத்துக்கொண்டிருக்கிறார். இப்போது உறவினர்கள், நண்பர்களிடம் வாங்கிய கடன் அவர் கழுத்துக்குமேல் தொங்கும் கத்தியாக உள்ளது.

'ஆன்லைன் கேம்ஸ், ரம்மி போன்றவை ஒருவர் தெரிந்தே செய்யும் தவறுகள். பணம் சம்பாதிக்கவேண்டும், அது வேலையே செய்யாமல் சுலபமாக கிடைக்கவேண்டும் என நினைக்கும் மனோபாவம்தான் இதற்கு முழுக்காரணம்.' சமூக ஊடகங்களில் வருவது உண்மையா, பொய்யா என யாரும் உறுதிசெய்வதில்லை. அது 100 சதவிகிதம் உண்மை என நம்புகிறார்கள். அப்படி நம்புகிறவர்கள் அனைவரும் படித்தவர்கள்தான். ஒருவரின் ஆசையைத் தூண்டிவிட்டு அதன்வழியாகப் பணம் பறிக்கிறார்கள், அதில் பெண்கள் அதிகளவில் ஏமாந்துபோகிறார்கள். இதுகுறித்து பல புகார்கள் வருகின்றன என்கிறார்கள் தினம் தினம் விதவிதமான புகார்களை சந்திக்கும் சைபர் க்ரைம் போலீஸார்.

ஆன்லைன் சூதாட்டத்தால் பல இளைஞர்கள் தனியாகவும், குடும்பத்துடனும் உயிரை இழந்தாலும் இன்னும் பலப் பல இளைஞர்கள் அதிலிருந்து மீளமுடியாமல் இருக்கிறார்கள். அதேபோல் சமீபகாலமாக செல்போன்களில் மூழ்கிக்கிடக்கும் இளம் பெண்களும் ஆன்லைன் சூதாட்டத்தால் வாழ்க்கையை இழந்துநிற்கின்றனர். அதில் ஸ்ரீகா தன் குழந்தையைக் கொன்று தன்னையும் மாய்த்துக் கொண்டுள்ளார்.

அதேநேரத்தில் உயிரை விடமுடியாதவர்கள் கடனை அடைக்க வேறு சில வழிகளைக் கையாள்கின்றனர். அது அவர்களை புதைகுழிக்குள் தள்ளுகிறது. அது அவர்களின் வாழ்க்கையை, குடும்பத்தை சின்னாபின்னமாக்கிவருகிறது என அதிர்ச்சித் தகவல்களை தருகிறார்கள்.

அது என்ன?

அடுத்த இதழில் பார்ப்போம்...!

**-து.ராஜா, ஆர்.பகத்சிங்**

# முருக பக்தர்கள் மாநாடு Vs முருகன் மீட்பு மாநாடு!

## –என்ன நடக்கப் போகிறது?

மதுரையில் வருகிற ஜூன் 22-ல் பா.ஜ.க. நடத்தவிருக்கும் முருகபக்தர்கள் மாநாட்டிற்கான கால்கோள்விழாவில், இந்துமுன்னணியின் தலைவர் கடேஸ்வரா சுப்பிரமணியன், பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், விஷ்வ இந்து பரிசத், மற்றும் இந்துத்துவா அமைப்புகள் கலந்துகொண்டன. இது தென்மாவட்டங்களில் பா.ஜ.க.வை வளர்த்தெடுக்கும் என்று நம்புகிறது பா.ஜ.க. இதற்குப் போட்டியாக, 'தமிழ்க் கடவுள் தமிழருக்கே!' என்று முருகன் மீட்பு மாநாட்டை ஜூன் 29 அன்று நடத்த மற்றொரு அமைப்பு திட்டமிட்டுள்ளது.

'எங்கள் முருகன் எங்களுக்கே! தமிழ்க் கடவுளுக்கு தமிழில் வேதம் ஓது! ஆறுபடை முருகன் கோயில் கருவறையில் தமிழ் ஓதுவார்களை நியமனம் செய்! கருவறையிலிருந்து வேற்றுமொழியான சமஸ்கிருதத்தை வெளியேற்று!' என்ற எதிர்கோஷத்துடன் தெய்வத் தமிழ் பேரவையினர், மக்கள் அதிகாரம் அமைப்பு, தமிழ் மடாதிபதிகள், தமிழ் நல்லிணக்க கூட்டமைப்பு, மற்றும் பண்டாரத்தார் சமூகத்தினர் ஆகியோர் ஒன்றுசேர்ந்து திட்டமிட்டு வருகின்றனர். மாநிலம் தழுவிய அளவில் மதுரையில் ஜூன் 29-ல் முருகன் மீட்பு மாநாடு வேலைகள் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது பா.ஜ.க.வினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

பா.ஜ.க. நடத்தும் முருக மாநாட்டில் தமிழகம் முழுவதுமிருந்து 5 லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. மாநாட்டில் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி, ஆந்திர மாநில துணை முதல்வர் பவன்கல்யாண், மத்திய அமைச்சர்கள், பா.ஜ.க. தேசிய நிர்வாகிகள் பங்கேற்கவுள்ளனர். "இந்த மாநாட்டின் நோக்கம் பா.ஜ.க. உறுப்பினர்களை சட்டமன்றத்திற்கு யாத்திரையாகக் கொண்டு செல்வதுதான். இந்த மாநாடு மூலம் இந்துக்கள் தமிழகத்தில் எழுச்சி பெறுவார்கள்" என்றார் பா.ஜ.க. மா.த.வான நயினார்



கால்கோள் விழாவில் நயினார்

NKH0625

www.nakkheeran.in

புரிந்து நடக்க ஒரு துணையிருந்தால், சரிந்து விழாமல் வாழ்ந்திடலாம்... வாழ்க்கை முழுவதும்!


சத்யபாமா

நாகேந்திரன். தமிழகத்தின் நகரம் மற்றும் கிராமங்களில் செயல்பட்டு வரும் பக்தர் குழுக்களைச் சேர்ந்தவர்களையும் பங்கேற்க வைக்க கட்சியினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. முருகன் பாதயாத்திரை குழுக்கள், ஐயப்ப பக்தர்கள் குழுக்கள், ஓம்சக்தி குழுக்கள், சாய்பாபா பக்தர்கள் குழுக்களின் முகவரிகளை சேகரித்து, அப்பகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. நிர்வாகிகள் மூலம் குழுவினரை மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கவும், அவர்களின் வருகையை உறுதிப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வின் முருக பக்தகள் மாநாட்டிற்குப் போட்டியாக ஆரிய கட்டுப்பாட்டிலுள்ள தமிழ்க் கடவுளை மீட்கும்விதமாக முருகன் மீட்பு மாநாட்டில், தமிழ் ஓதுவார்கள், பண்டாரத்தார் சமூக பேரவையினர், தெய்வத்தமிழ் பேரவையினர், தமிழ் மடாதிபதிகள், தமிழ் நல்லிணக்க கூட்டமைப்பு, மதநல்லிணக்க கூட்டமைப்பு போன்றவற்றை ஒருங்கிணைத்துவரும் வழக்கறிஞர் வாஞ்சிநாதன் நம்மிடம், “பா.ஜ.க., விஷ்வ ஹிந்து பரிசத், இந்து முன்னணி, அதன் பரிவாரங்கள் தமிழகத்தில் பெரும் திட்டத்தோடு தமிழ்க் கடவுள் முருகனை கையிலெடுத்து மதமோதலை ஏற்படுத்தி முஸ்லிம்கள் மீது வெறுப்புணர்வை உண்டாக்கி, பெரும்பான்மை இந்து வாக்குகளை அள்ளத் திட்டமிடுகிறார்கள். தமிழகத்தில் முருகன் குறிஞ்சிநில கடவுள். முருகன் என்ற பெயரை சுப்ரமணியன் என்று சமஸ்கிருதத்தில் மாற்றினாலும் அவர்களே வேறுவழியின்றி முருக பக்தர்கள் மாநாடு என்றுதான் சொல்லவேண்டியுள்ளது.

நாங்கள் கேட்பது ஒன்றே ஒன்றுதான், பா.ஜ.க. நடத்தும் முருக மாநாட்டில் தமிழ்க் கடவுள் முருகனுக்கு தமிழில்தான் வேதம் ஓதவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றுவார்களா? அதேபோன்று நாயக்கர் மன்னர் காலம் வரை ஆறுபடை முருகன் கோயிலில் பூசைசெய்த பண்டாரத்தவர் சமூகத்தினரின் உரிமையை மீட்டு அவர்களே பழனி முருகன் கோயிலில் பூஜை செய்யவேண்டும் என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றுவார்களா? அது அவர்களால் முடியாது. ஜூன் 29-ல் நடத்தும் முருக மீட்பு மாநாட்டில் மேற்சொன்ன தீர்மானங்களைப் போடுகிறோம். எங்கள் கூட்டமைப்புகள் கிராமம் கிராமமாக நகரம் நகரமாக முருக பக்தர்களிடம் செல்கிறோம். தமிழ்க் கடவுள் முருகனுக்கு அர்ச்சனை தமிழில் இருக்கவேண்டுமா? வேற்று பாஷை சமஸ்கிருதத்தில் இருக்க வேண்டுமா? பழனிமுருகன் கோயிலில் ஆண்டாண்டு காலமாக பூஜை செய்த தமிழ் பண்டாரத்தார்களை மீண்டும் அரசு அங்கு பணியமர்த்த வேண்டும் என்று மக்களிடம் எடுத்துக்கூறி, பல லட்சம் தமிழர்களை ஒன்றுதிரட்டவிருக்கிறோம்” என்றார்.

முருகன் மீட்பு மாநாடு குறித்து தெய்வத் தமிழ் பேரவையின் தலைவரும் சாமியாருமான சத்யபாமா நம்மிடம், “எங்கள் அமைப்பின் சார்பில் அனைத்து கோயில் குடமுழுக்கு நிகழ்ச்சிகளை இனி தமிழில்தான் நடத்தவேண்டும் என்று கடந்த பத்து வருடமாகப் போராடிவருகிறோம். தற்போது சங்பரிவார், ஆரிய அமைப்புகள் ஒன்றுசேர்ந்து முருகனைக் கையிலெடுத்து மதவாத அரசியலை முன்னெடுக்கிறார்கள். இதை முறியடிக்கவேண்டும். திருமுருகாற்றுப்படை, முருகனுக்கு தினை அரிசியில் ஆட்டை வெட்டிய இரத்தம் கலந்த படையல் வைக்க வேண்டும் என்று சொல்கிறது. தமிழில் ஆகம மந்திரங்கள், திருவாசகம், திருமந்திரம் 2,500 வருடமாக கருவறையில் பாடப்பட்டு வந்த வழக்கத்தை ஆரியர்கள், இங்கிருந்த அரசர்களை வைத்து மாற்றினார்கள். வரும் காலங்களில் தமிழ்க் கடவுள் முருகனுக்கு தமிழ் வேத ஓதுவார்களை நியமிக்க வேண்டி மதுரையில் மாபெரும் மாநாடு நடத்தவிருக்கிறோம்” என்றார்.


வழக்கறிஞர் வாஞ்சிநாதன்

முருகனை வைத்து மதுரையில் பரபரப்பு தொற்றியுள்ளது!

–அண்ணல்

NKN110625

# பாலம் அடித்துச்செல்ல மழை காரணமா? பிழை கா

## –அறப்போர் ஜெயராமன் கேள்வி!



அடித்துச் செல்லப்பட்ட அந்தப் பாலம்

**த**மிழக நெடுஞ்சாலைத்துறை கட்டிய பாலத்தில் ஊழல் முறைகேடு நடந்திருப்பதாகக் குற்றம் சாட்டுகிறது அறப்போர் இயக்கம். இது குறித்து முதல்வர் ஸ்டாலினுக்கும் தமிழக லஞ்ச ஒழிப்புத்துறைக்கும் புகார்களும் அனுப்பப் பட்டுள்ளன. கட்டி முடித்து திறந்து வைக்கப் பட்ட மூன்றே மாதத்தில் மழை வெள்ளத்தில் இடிந்துபோன பாலத்தில் நடந்துள்ள ஊழல்களை அம்பலப்படுத்துகிறது அந்த புகார்.

திருவண்ணாமலை மாவட்டம் தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட புதிய உயர்மட்ட பாலம், கடந்த 2024 செப்டம்பரில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், டிசம்பரில் வெளுத்து வாங்கிய கனமழையில் அந்த புதிய பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இந்த சம்பவம் நெடுஞ்சாலைத்துறையை மட்டு மல்ல; தி.மு.க. அரசையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அந்த சம்பவம் குறித்து, 'வரலாறு காணாத அளவுக்கு கனமழை பொழிந்ததால் ஏற்பட்ட துயரம்' என்று மழை வெள்ளத்தின் மீது குற்றம்சாட்டிவிட்டு அமைதியாகிப் போனார்கள் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள்.

இந்த நிலையில், 'உயர்மட்டப் பாலம் உடைந்து போனதற்கு மழை வெள்ளம் காரணமல்ல; பாலத்தில் நடந்துள்ள ஊழல் முறைகேடுகள்தான் காரணம்' என்று குற்றம்சாட்டுகிறது அறப்போர் இயக்கம்.

இதுகுறித்து அந்த இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஜெயராம் வெங்கடேச னிடம் பேசியபோது, "தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அகரம் பள்ளிப்பட்டு மற்றும் தொண்டமானூர் இடையே இந்த உயர்மட்ட பாலத்தை கட்டுவதற்காக 17 கோடி ரூபாயை ஒதுக்கியது தமிழக நெடுஞ்சாலைத்துறை.

பாலம் கட்டுவதற்கான டெண்டர், நெடுஞ்சாலைத் துறை நபார்ட் மற்றும் கிராம சாலைகள் செங்கல்பட்டு வட்டத்தின் கண் காணிப்பு பொறியாளரால் கடந்த 2022, ஆகஸ் டில் வெளியிடப்பட்டது. டெண்டர் அறிவிப் பின்படி, பாலம் கட்டுவதற்கான மொத்த தொகை 12.98 கோடி என மதிப்பிடப்பட்டி ருந்தது. ஆனால், அரசு நிர்ணயித்திருந்த இந்த தொகையை எவ்வித காரணமும் இல்லாமல் 13.94 கோடியாக உயர்த்தி ஏ.எஸ்.ஆர். கன்ஸ்ட்ரக்சன் எனும் காண்ட்ராக்ட் நிறுவனத்துக்கு இந்த பாலத்தைக் கட்டும் டெண்டரை கடந்த 2023,

# ரணமா?



பிப்ரவரியில் ஒதுக்கீடு செய்துள்ளனர். அதாவது, டெண்டர் தொகையை 7 சதவீதம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. அதேசமயம், பாலம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, இந்த பாலம் விழுந்கிய மொத்தச் செலவு 15.9 கோடி.

இந்த நிலையில், மக்களின் பயன்பாட்டிற்காக இந்த உயர்மட்ட பாலத்தை கடந்த 2024, செப்டம்பரில் துறையின் அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். ஆனால், பாலம் திறந்து வைக்கப்பட்ட அடுத்த மூன்றாவது மாதம் (டிசம்பர்) பெய்த கனமழையில் பாலம் அடித்துச் செல்லப்பட்டது.

இந்தியன் ரோடு காங்கிரஸின் வழிகாட்டும் நெறிமுறைகளைப் பின்பற்றியே பாலத்தை வடிவமைக்கிறது தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறை. அதன்படி கட்டப்படும் பாலத்தின் ஆயுள் 100 ஆண்டு காலம் இருக்க வேண்டும். இதற்காக, 100 ஆண்டுகாலத்தில் பொழிந்த கனமழையின் அளவைக் கணக்கிட்டே பாலத்தின் வலிமையை இறுதி செய்து அதன்படி கட்டப்பட வேண்டும்.

கடந்த 2024, டிசம்பரில் இங்கு பெய்த கனமழையினால் இந்த பாலத்தின் வழியாக பெருக்கெடுத்து ஓடிய வெள்ளத்தின் அளவு 1 லட்சத்து 68 ஆயிரம் கன அடி. வரலாறு காணாத அளவுக்கு கூடுதல் மழை பெய்ததால் பாலம் தாங்கவில்லை என வெள்ளத்தில் பாலம் அடித்துச் செல்லப்பட்டதற்கு காரணம் சொல்கின்றனர். ஆனால், கடந்த 1972-ல் தென்பெண்ணை ஆற்றின் வழியாக 2 லட்சத்து 80 ஆயிரம் கன அடி வெள்ளம் கடந்து சென்றது என்பதை 2019-ல் நெடுஞ்சாலைத் துறையிடம் பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது. இதற்கான தரவுகளை துறை அதிகாரிகள் வைத்துள்ளனர். அப்படிப்பட்ட நிலையில், விதிகளின்படி, 100 ஆண்டுகளுக்கான வெள்ளத்தின் அளவை வைத்து இந்த பாலத்தை வடிவமைத்திருக்க வேண்டும்.

ஆனால், இதனை கவனத்தில் கொள்ளாமல் வெறும் 54,000 கன அடி வெள்ளத்தின் அளவை மட்டுமே வைத்து பாலத்தை வடிவமைத்துள்ளனர் அதிகாரிகள். அதனால் 54,000 கனஅடிக்கு அதிகமாக வெள்ளம் வந்ததால் பாலம் இடிந்துள்ளது. 2 லட்சத்து 68 ஆயிரம் கன அடிக்கு இந்த பகுதியில் கடந்த காலத்தில் வந்த வெள்ளத்தைக் கணக்கிடாமலும், தொழில் நுட்பக் காரணங்களை புறந்தள்ளியதாலும் பாலம் அடித்துச் செல்லப்பட்டதை மறைத்து, வரலாறு காணாத மழை வெள்ளம் எனப் பொய்யான காரணத்தை சித்தரித்திருக்கிறார்கள். இது முதல் தவறு.

மேலும், 249 மீட்டர் அளவுக்கு பாலத்தில் தண்ணீர் செல்ல வழி இருக்க வேண்டும் என டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பிறகு அதனை 183 மீட்டராகக் குறைத்துள்ளனர். இப்படி குறைத்ததால், வெள்ளத்தின் அழுத்தம் பாலத்தில் அதிகரித்துள்ளது. தண்ணீர் செல்லும் வழியின் நீள அளவைக் குறைத்தது ஏன்? இதற்கான காரணங்களை அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. பாலங்களின் தூண்கள் அடியுடன் சாய்ந்திருப்பதை கணக்கிடும் போது முறையான ஆழத்தில் தூண்கள் அமைக்கப்படவில்லை என்பதும் புலனாகிறது. அதுமட்டுமல்லாமல், பாலத்தின் அடித்தளம் 4.7 மீட்டர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 3 மீட்டருக்கு மேலிருப்பது மெதுவான உடைந்த பாறைகள் என்பதால் தேய்த்தல் ஆழத்தை பொறியாளர்கள் சரியாகக் கணக்கிடவில்லை.

அதேசமயம், இந்த பாலத்திற்கு அருகேயுள்ள மற்றொரு பாலமும் 54,000 கன அடிக்குத்தான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்கிற வாதத்தை வைக்கின்றனர். ஆனால், அந்த பாலம் கட்டப்பட்டு பல வருடங்கள் ஆகிறது. எத்தனையோ

## தற்காலிக சுகத்திற்காக எதிர்காலத்தின் படிகளை எரித்துவிடாதீர்கள்!

பெருவெள்ளத்திலும், 2024 டிசம்பரில் பொழிந்த மழை வெள்ளத்திலும் கூட அந்த பாலம் இடிந்து விடவில்லை; வெள்ளத்தில் அடித்துச்செல்லவும் இல்லை. ஆனால், அதே 54,000 கன அடிக்கு வடிவமைத்து கட்டி முடித்து அமைச்சரால் திறந்து வைக்கப்பட்ட இந்த பாலம் மட்டும் ஏன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது?

அப்படியானால், பாலம் அடித்துச் செல்லப்பட வடிவமைப்பு மட்டுமே காரணம் அல்ல; பாலத்தின் கட்டுமானத்திலும் ஏகப்பட்ட குளறுபடி நடந்திருப்பதும் புலனாகிறது. ஆக, தரமற்ற பாலத்தினை கட்டி விட்டு (அருகில் உள்ள பாலம் தரமான கட்டுமானத்தில் உள்ளதால் இடிந்து விழவில்லை) மழை வெள்ளத்தின் மீது பழி போட்டு தங்களின் குளறுபடிகளை மறைக்கிறது.

இந்த பாலம் கட்ட 17 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், 13 கோடி என மதிப்பிட்டு, பிறகு 14 கோடியை காண்ட்ராக்டருக்கு கொடுத்து, அதன் பிறகு 16 கோடி செலவானதாகக் காட்டியுள்ளனர். எதனால் தொகை அதிகரித்தது? எப்படி செலவழிக்கப்பட்டது? என்கிற கேள்விகளுக்கு விடை தேடியபோது, பாலத்தில் அதிகப்படியான ஊழல் நடந்திருப்பது தெரிகிறது.

அதனால் பாலத்தில் நடந்த இந்த ஊழல்களுக்கு காரணமான உதவிப்பொறியாளர், உதவி கோட்டப்பொறியாளர், கோட்டப் பொறியாளர், மற்றும் கண்காணிப்பு பொறியாளர் தேவராஜ், இவர்கள் கொடுத்த வடிவமைப்பு ரிப்போர்ட்டைகள ஆய்வு செய்யாமல் அப்படியே அனுமதித்த தலைமைப் பொறியாளர் கீதா ஆகியோர் குற்றவாளிகள்.

இவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களை பாதுகாத்து வருவதுடன், இந்த ஊழல்களை மறைத்தும் வருகின்றனர். இதனால், உயர்மட்டப் பாலத்தோடு மக்களின் வரிப்பணம் 16 கோடி ரூபாயும் வெள்ளத்தில் அடித்துச் சென்றிருப்பது ஜீரணிக்க முடியாத விசயம். இந்த ஊழல் முறைகேட்டில் தொடர்புடைய அனைவர் மீதும் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்து இந்த ஊழலை விசாரிக்க வலியுறுத்தி தமிழக லஞ்ச ஒழிப்புத்துறையிடம் புகார் கொடுத்துள்ளோம். அதேபோல, இந்த பால ஊழலில் விசாரணை முடியும்வரை சம்பந்தப்பட்ட அனைவரையும் பணியிடை நீக்கம் செய்யவேண்டும் என்றும், மக்களின் வரிப் பணத்தை பாழடித்த இவர்களிடமிருந்து அந்த தொகையை மீட்டெடுக்க வேண்டும் என்றும் முதல்வர் ஸ்டாலினுக்கு புகார் அனுப்பியுள்ளோம்" என்று விரிவாகச் சுட்டிக்காட்டுகிறார் ஜெயராம் வெங்கடேசன்.



ஜெயராம் வெங்கடேசன்

இது குறித்து துறையின் அதிகாரிகளிடம் பேசியபோது, "குறிப்பிட்ட இடத்தில் பாலம் கட்டுவதற்கு முன்பு, நீர் மேலாண்மைத் துறையிடமிருந்து ஒரு சான்றிதழ் பெறப்படும். அந்த சான்றிதழின்படிதான் பாலம் வடிவமைக்கப்படுகிறது. அந்த வகையில், தென்பெண்ணையாற்றில் வெள்ளத்தின் அளவு 54,000 கன அடி என சொல்லப்பட்டது. அதற்கேற்ப பாலத்தை பொறியாளர்கள் வடிவமைத்தனர். ஆனால், அன்றைக்கு பொழிந்த மழையின் அளவு 2 லட்சத்து 25 ஆயிரம் கன அடி. இந்த மழை வெள்ளம் பெருக்கெடுத்து சாத்தனூர் டேமிற்கு வந்தது. யாருமே எதிர்பாராத மிக கனமான மழைப் பொழிவு அது. டேமிற்கு வெள்ளத்தின் வரத்து அதிகமாக இருந்ததால், டேம் உடைந்துவிடுமோ என பயந்து டேமை திறந்து விட்டனர். இதனால், ஒரே வேகத்தில் 2,25,000 கன அடி வெள்ளமும் பாய்ந்து வந்ததால் அதன் வேகத்தினை தாங்கமுடியாமல் பாலம் உடைந்தது. இதுதான் உண்மை. இதில் எந்த ஊழலும் நடக்கவில்லை. இதே குற்றச்சாட்டை சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பினார். அதற்கு தகுந்த விளக்கத்தை அமைச்சர் சபையில் தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொண்டார் எதிர்க்கட்சித் தலைவர். ஊழல் நடந்திருந்தால் எடப்பாடி சும்மா இருந்திருப்பாரா? ஆக, பாலம் உடைந்தது எதிர்பாராத வெள்ளத்தால்தான்; ஊழல்களால் இல்லை" என்று விளக்கம் தருகின்றனர்.

'நேர்மையான நிர்வாகத்தைத் தரவேண்டும் என்று அயராது உழைக்கும் முதல்வர் ஸ்டாலின், இந்த பாலம் தொடர்பான ஊழலில் என்ன நடந்து என்கிற விசாரணைக்கு உத்தரவிடுவாரா?' என்கிற எதிர்பார்ப்பு துறையின் நேர்மையான அதிகாரிகளிடம் எதிரொலிக்கிறது.

**–இரா.இளையசெல்வன்**



ஜூன் 11,12
சேலம் மாவட்டத்திற்கு
பல்வேறு
நிகழ்ச்சிகளில்
கலந்துகொள்ள
வருகை தரும்
ஓரணியில் தமிழ்நாடு
தமிழ்நாட்டின் மாணவர்களின்
கல்வியை உயர்த்திட்ட
தாயுமானவரே!
வருக! வருக!!
P.பிரகாஷ் B.E.,
ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர்
பனமரத்துப்பட்டி ஒன்றிய மாணவரணி, சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க


advt

# கூட்டணி ஷாக்!
# பிரதமர் கனவில் அமித்ஷா!

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் மதுரை விசிட், வெறுமனே பா.ஜ.க.வினருடன் ஆலோசனை நடத்துவதற்காக மட்டுமல்ல, எதிர்காலத்தில் பிரதமராக வேண்டும் என்கிற அவரது பெர்சனல் விவகாரத்திற்காகவும்தான் என்ற டாக் பா.ஜ.க.வில் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது.

வடஇந்திய அரசியல் தலைவர்கள் பலரும் தங்களின் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்கும்போதும், எதிர்கால அரசியல் விருப்பங்களை நிறைவேற்ற முயற்சிக்கிற போதும் ஆன்மீக சாமியார்கள் மற்றும் ஜோதிடர்களிடம் ஆலோசனை பெறுவது இயல்பாக இருக்கிறது. அந்த ஆலோசனையில் சொல்லப்படும் தகவல்களைப்





பொறுத்து அவர்களின் அரசியல் நடவடிக்கைகள் அமைகின்றன. அந்த வகையில், அமித்ஷாவின் மதுரை விசிட்டும்கூட அந்த ரகத்தைச் சேர்ந்ததுதான் என்கின்றன டெல்லியிலிருந்து கிடைக்கும் தகவல்கள்.

இதுகுறித்து விசாரித்தபோது, "ஆன்மீகத்திலும், ஜோதிடத்திலும் நம்பிக்கைகொண்ட அமித்ஷாவை சில மாதங்களுக்கு முன்பு சந்தித்துள்ளனர் ஜோதிடர்கள் சிலர். அப்போது, பிரதமர் மோடிக்குப் பிறகு அந்த பதவியை கைப்பற்ற பலரும் முயற்சித்தாலும், அந்த பதவியை அலங்கரிக்கும் யோகம் உங்களுக்குத்தான் அதிகமிருக்கிறது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் கூட உங்கள் தலைமையில்தான் நடக்கும் எனச் சொல்லியிருக்கிறார்கள்.

வாய்ப்புக் கிடைக்கும்போது, தென் தமிழகத்தில் மதுரையிலுள்ள மீனாட்சி அம்மன் கோவிலில் ஒரு சிறப்பு பூஜை நடத்திவிட்டு வாருங்கள். எல்லாம் தானாக நடக்கும் எனச் சொல்லிய அந்த ஜோதிடர்கள், மதுரை மீனாட்சி அம்மன் மற்றும் சுந்தரேஸ்வரர் சிவன் கோவிலின் தல புராணத்தை விவரித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, புதன் அதிபதியாக ஆட்சி பெற்ற புண்ணியஸ்தலம் இது. தவிர, மிகவும் சக்தி வாய்ந்த வல்லப சித்தர் ஆட்சி புரிந்து மறைந்த இடமும் இங்கு தான். புதனின் ஆட்சியும் வல்லப சித்தரின் அனுகிரகங்களும் ஒருங்கே பெற்ற கோவில் என்பதால், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் சிவன் கோவிலுக்கு சக்தி அதிகம். உங்களின் ஜாதகத்தின் அமைப்பை அலசியபோது, இந்த கோவிலில் வழிபாடு நடத்தினால் ஆளுமைமிக்க அரசியல் மற்றும் உயர் பதவிகள் உங்களைத் தேடி வரும். மதுரைக்கு நீங்கள் சென்று வருவது உத்தமம் என அமித்ஷாவுக்கு ஜோதிடர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

75 வயதை முடித்தவர்கள் பா.ஜ.க.வின் உயர் பதவிகளில் இருந்து விலக வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ்.ஸின் எழுதப்படாத சட்டம். அந்த வகையில், வருகிற செப்டம்பர் (2025) மாதத்தோடு பிரதமர் மோடிக்கு 75 வயது முழுமை பெறுகிறது. அந்த வகையில், பிரதமர் பதவியிலிருந்து விலக நேரிட்டால், புதிய பிரதமரை தேர்வு செய்யும் ஆலோசனை ஆர்.எஸ்.எஸ்.ஸில் நடக்கும். மோடிக்குப் பிறகு யார் பிரதமர்? என்கிற கேள்விக்கு ஏற்கனவே சிலரது பெயர்களை முன்னிறுத்தி ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் மத்தியில் முக்கிய விவாதம் நடந்திருக்கிறது. அதேசமயம், அந்த பதவியைக் கைப்பற்ற பா.ஜ.க.வின் ஜாம்பவான்கள் சிலர் பகீரத முயற்சியில் இருந்து வருகிறார்கள். ஆனால், வயது பிரச்சனையைக் காட்டி பிரதமர் பதவியிலிருந்து மோடி விலக நேரிட்டால், அந்த பதவியில் மோடி சுட்டிக்காட்டுபவர்தான் இருக்க வேண்டும் என்கிற அரசியலும் இதில் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில்தான், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குறித்த தல வரலாற்றை அமித்ஷாவிடம் ஜோதிடர்கள் விவரித்தனர்.

மோடிக்கு 75 வயது முழுமையாக (செப்டம்பர் 17, 2025) இன்னும் 3 மாதங்களே இருக்கின்றன. இந்த பின்னணியில்தான், அமித்ஷாவின் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் விசிட் தீர்மானிக்கப்பட்டது. கோவில் தரிசனத்திற்காக மட்டுமே வந்தால் அதனைச் சுற்றி பல ஹேஸ்யங்கள் உருவாகும் என்பதால்தான், பா.ஜ.க. நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த மதுரைக்கு அமித்ஷா வருகிறார் என்ற அரசியல் கட்டமைக்கப்பட்டது.

அதாவது, பா.ஜ.க. நிர்வாகிகளுடன் விவாதிக்க அமித்ஷா மதுரைக்கு வருவதால், அப்படியே மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தரிசனம் செய்தார் என தோற்றம் உருவாகும். எதற்காக மீனாட்சி கோவிலுக்கு வந்தார் என்கிற ஆராய்ச்சியெல்லாம் நடக்காது எனத் திட்டமிட்டே இந்த மதுரை விசிட் முடிவானது. பா.ஜ.க. நிர்வாகிகளுடன் அமித்ஷா ஆலோசனை நடத்துவதுதான் திட்டமிடப்பட்ட புரோக்ராம் எனில், ஆலோசனைக் கூட்டத்தை மதுரையில்தான் நடத்த வேண்டும் என்பதில்லையே... சென்னையில் நடத்தலாமே! ஆக, அடுத்த பிரதமராக வேண்டும் என்கிற அரசியல் ரகசியம்தான் அமித்ஷாவின் மதுரை விசிட்டின் பின்னணி" என்று விரிவாகச் சொல்கிறார்கள் பா.ஜ.க.வின் மேலிடத்துக்கு நெருக்கமான டெல்லி தொடர்பாளர்கள்.

இந்த பின்னணியில் மதுரைக்கு வந்த அமித்ஷா, மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்றார். அவரது வருகையை ஒட்டி 5 அடுக்குப் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. கோவிலுக்கு வருகை தந்த அமித்ஷாவுக்கு கோவில் அறங்காவலர் கமிட்டி சார்பில் பூரண கும்ப மரியாதை செய்யப்பட்டது. மீனாட்சி அம்மன்-சுந்தரேஸ்வரர் சிவனை வணங்கினார். அவருக்காக சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டிருக்கிறது. சிவனை மனம் உருக வழிபட்டார் அமித்ஷா. வழிபாடும் தரிசனமும் முடிந்ததும் கோவிலிலிருந்து புறப்பட்ட

NKN110625

www.nakkheeran.in



நிர்வாகிகள் கூட்டத்தில் அமித்ஷா

# ஆடுமலைக்கு டோஸ்!
## -அமித்ஷா மதுரை விசிட் பின்னணி!

கடந்த ஜூன் 7-ம் தேதி இரவு மதுரை வந்திறங்கிய அமித்ஷா, பா.ஜ.க. தமிழகத் தலைவர் நயினார் நாகேந்திரன், பின் ஆடுமலை இருவரிடமும் 10 நிமிடங்கள் பேசிவிட்டு, அங்கிருந்து மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றார். இருவரும் வெளியேவந்ததும் மு.மா.த. வாழ்க! வருங்கால முதல்வர் நயினார் வாழ்க என்று தொண்டர்கள் கோஷம் போட, இரு தலைவர்களுமே தொண்டர்களை கோஷம் போடவேண்டாம் என்று சொல்லிவிட்டு கோபமாக காரில் புறப்பட்டுச்சென்றனர்.

உள்ளே என்ன நடந்ததாம்?

தனித்துநின்றால்தான் பா.ஜ.க.வை தனிப்பெரும் கட்சியாக வளர்க்கமுடியும் என்பது மு.மா.த.வின் எண்ணம். ஆனால் பா.ஜ.க. தலைமையோ தமிழகத்தில் பா.ஜ.க. தலைமையில் ஆட்சி ஏற்படவேண்டுமென்றால் அதற்கு அ.தி.மு.க. வேண்டும். அவர்களோடு கூட்டணியிலிருந்து கொண்டுதான் பா.ஜ.க.வை வளர்த்தெடுக்கமுடியுமென நம்புகிறது. தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். கடந்த இரண்டு வருடமாக கிராமம் கிராமமாகச் சென்று

அமித்ஷா, நட்சத்திர ஹோட்டலில் சற்று ஓய்வு எடுத்தார். அதன்பிறகு, தமிழக பா.ஜ.க.வினர் ஏற்பாடு செய்திருந்த மாநில நிர்வாகிகள், மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதில், சட்டமன்றத் தேர்தலை எதிர் கொள்வது, வெற்றிக்கான வியூகம் அமைப்பது, கூட்டணிக் கட்சிகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதிலுள்ள சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதித்தார். அப்போது அமித்ஷா கேட்ட கேள்விகளுக்கு தலைவர்கள் சிலர் விளக்கமளித்தனர்.

கூட்டத்தில் பேசிய அமித்ஷா, தமிழ்நாடு சார்ந்த பல விசயங்களையும், சிந்தூர் ஆபரேசனின் வெற்றி பற்றியும் சிலாகித்துச் சுட்டிக்காட்டினார். அவரது பேச்சில் கூட்டணி அரசியலும் முக்கிய பங்கு வகித்தது. அது குறித்துப் பேசும்போது, இந்த நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் என்னுடைய சிந்தனை முழுக்க தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. தி.மு.க.வை அமித்ஷாவால் தோற்கடிக்க முடியாது என தமிழக முதல்வர் சொல்கிறார். என்னால் முடியாதுன்னு அவர் நினைத்துக்கொள்ளட்டும். ஆனால், தமிழக மக்கள் தி.மு.க.வை தோற்கடிப்பார்கள். தமிழகத்தின் நாடித்துடிப்பை நன்றாக அறிந்து வைத்துள்ளேன். நிச்சயம் தி.மு.க.வை தூக்கி எறிவார்கள்.

பல மாற்றங்களுக்கு வித்திட்டுள்ள இந்த மதுரை மண், தி.மு.க.வை வீட்டுக்கு அனுப்பும். 2026 தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றிபெறும். தமிழகத்தில் அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணி அமையும். 27 ஆண்டுகளுக்குப் பிறகு டெல்லியில் ஆட்சியை கைப்பற்றியது போல, 2026-ல் தமிழ்நாட்டிலும், மேற்குவங்கத்திலும் ஆட்சி அமைப்போம்'' என்று அழுத்தமாகப் பேசினார் அமித்ஷா. கூட்டமும் ஆர்ப்பரித்தது.


அமித்ஷாவின் இந்த பேச்சு அ.தி.மு.க. கூட்டணியில் அதிர்ச்சியையும் சலசலப்பையும் உருவாக்கியிருக்கும் சூழலில், எடப்பாடி உள்ளிட்ட அ.தி.மு.க. தலைவர்களுக்கு ஷாக்கையும் கொடுத்துள்ளது.

அமித்ஷாவின் பேச்சை முழுமையாகக் கேட்ட அ.தி.மு.க. சீனியர் தலைவர்கள் சிலர்,

www.nakkheeran.in



கடல் வழியாக கப்பலில் காசாவுக்குள் நுழைய முயன்ற கிரெட்டா தன்பெர்க்; கைது செய்த இஸ்ரேல்



**உத்தரபிரதேசத்தில் கோவிலுக்கு சென்ற நீதிபதியின் தாலி செயின் திருட்டு - 10 பெண்கள் கைது**

ஆய்வுசெய்து கொடுத்ததன் பின்னணியில்தான் நயினார் நாகேந்திரன் கொண்டுவரப்பட்டார்.

கொங்கு மண்டலத்தில் கவுண்டர் சமுதாய வாக்கு வங்கியை ஓரளவுக்கு கைப்பற்றியதுபோன்று தென்மாவட்டங்களில் முக்குலத்தோர் சமுதாயத்தை கையிலெடுக்க நயினார்தான் சரியான தேர்வு என்பது அமித்ஷாவின் வியூகம்.

தற்போது பா.ஜ.க.வில் பெரும்பாலும் மு.மா.த. நியமித்த நிர்வாகிகளே இருக்கிறார்கள். கடந்த ஒரு மாதமாக சமூக வலைத்தளங்களில் மு.மா.த. ஆதரவாளர்கள், நயினார் ஆதரவாளர்கள் கடுமையாக மோதிக்கொள்கிறார்கள். இது தலைமைவரை செல்ல, மதுரை வந்த அமித்ஷா மு.மா.த.வை முதலில் அழைத்து, “இது மாநில கட்சி அல்ல, தேசிய கட்சி. கட்சி நலன் சார்ந்துதான் முடிவெடுக்க முடியும். முதலில் உனக்கு தொலைநோக்குப் பார்வை வேண்டும். கொங்கு மண்டலத்தில் பா.ஜ.க. வளர்ந்துள்ளது. வடக்கில் பா.ம.க.வை வைத்து ஓட்டு வாங்கிவிடலாம். ஆனால் தென்மாவட்டங்களில் வளரவேண்டுமென்றால் நயினார் நாகேந்திரனும், அ.தி.மு.க.வும் கட்டாயம் வேண்டும். இதற்கு அனைவரின் ஒத்துழைப்பு வேண்டும். தனி ஆவர்த்தனம் செய்யாதே. மீறிச் செய்தால் என் அணுகுமுறை வேறு மாதிரி இருக்கும்’’ என்றவர், நயினாரை அழைத்து “இருவரும் இணைந்து செயல்படுங்கள். அடுத்து நிச்சயம் நமது ஆட்சிதான்’’ என்று நம்பிக்கையளித்திருக்கிறார்.

பின், பா.ஜ.க.வின் முக்கிய நிர்வாகிகள் 22 பேர் மட்டுமே கலந்துகொண்ட பா.ஜ.க.வின் உயர்மட்ட ஆலோசனைக் குழு கூட்டத்திற்கு சென்றவர், அங்கு நான்கு வியூகங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

அதில் முக்கியமாக அயோத்திக்கு இராமர், ஒரிசாவிற்கு பூரி ஜெகன்னாதர் மாதிரி தமிழகத்திற்கு முருகன். இந்த முருக பக்தர்கள் மாநாட்டை மிகச்சிறப்பாக நடத்தவேண்டும்.

கிராமம் கிராமமாக இந்து அமைப்புகள், மார்வாடி சங்கங்கள், ஆன்மிகம் சார்ந்த சங்கங்கள், அமைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதற்கு உங்களுக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., உயரதிகாரிகள் உறுதுணையாக இருப்பார்கள் என்று தெம்பூட்டிச் சென்றிருக்கிறார்.

**-அண்ணல்**

NKN110625

எடப்பாடி பழனிச்சாமியை தொடர்புகொண்டு, ‘அமித்ஷாவின் பேச்சைக் கேட்டீர்களா?’ என்று வினவியிருக்கிறார்கள். அப்போது, ‘எனக்கும் அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. பா.ஜ.க.வுடன் கூட்டணி மட்டும்தானே தவிர, கூட்டணி ஆட்சியில்லை என நமது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்த பிறகும் அமித்ஷா ஏன் இப்படிப் பேசுகிறார்?’ எனக் கேட்டுள்ளார் எடப்பாடி.

மேலும், ‘எப்படிப்பட்ட பின்னணியில் நாம் பா.ஜ.க.வுடன் கூட்டணியை உறுதிப்படுத்தினோம் என்பது அவருக்குத் தெரியும். அப்படியிருக்கையில், நம்முடன் கூட்டணி அமைத்துவிட்டு, கூட்டணியில் பேசப்படாத, முடிவு செய்யப்படாத விசயங்களை ஏன் அவர் பேசவேண்டும்? பா.ஜ.க. கூட்டணியை மறுபரிசீலனை செய்யுங்கள் என்று இப்போதும் நம் கட்சியில் சில எதிர்ப்புகள் இருக்கும் சூழலில், கூட்டணி ஆட்சிதான் என்று அழுத்தம் திருத்தமாக அமித்ஷா பேசுவது கூட்டணியில் குழப்பம் ஏற்படுத்துவதுடன், தேர்தல்வரை ஆரோக்கியமாக கூட்டணியை நகர்த்திச் செல்வதில் முரண்பாடுகள் உருவாகும்’ என்று சீனியர்கள் அதிருப்தியடைந்ததை ஆமோதித்திருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி.



மீனாட்சி அம்மன் கோயிலில் அமித்ஷா

அ.தி.மு.க. -பா.ஜ.க. கூட்டணி ஆட்சி இல்லை என்று அ.தி.மு.க. நிர்வாகிகளையும் தொண்டர்களையும் ஏற்கனவே எடப்பாடி சமாதானப்படுத்தியிருக்கும் நிலையில்... அமித்ஷாவின் கூட்டணி ஆட்சி பேச்சால், மீண்டும் அ.தி.மு.க.வில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களையும், சர்ச்சைகளையும் எடப்பாடி எப்படி சமாளிப்பார் என்பதுதான் அ.தி.மு.க.வில் தற்போது நடக்கும் உச்சபட்ச விவாதம் என்கின்றனர் சீனியர் ர.ர.க்கள்.

**-இரா.இளையசெல்வன்**

# தக் லைஃப்

# வலை வீச்சு















www.nakkheeran.in





















PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88, REGD No.TN/CH/(C)/573/2023-2025
Licensed to Post without Prepayment No.:TN/PMG(CCR) WPP-649/2023-2025 Date of Publication on posting : Every Tuesday & Friday




advt